பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 07 சனிக்கிழமை (21.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :176

## பொதுக்கட்டமைப்பு விடயத்தில்

# சந்திரிகா சதி அரசியல்!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,மே21

**"விரைவில் பொதுக்கட்டமைப்பு வந்துவிடும் என்று சந்திரிகா அம்மையார் விடும் அறிவிப்புக்கள் உண்மைத்தன்மை கொண்டவை அல்ல. உலகப் பெரும் நிதியைப் பெற்றுவிடத் துடிக்கும் ஏமாற்று நோக்கம் கொண்டவையாகவே அவற்றைப் புலிகள் இயக்கம் கருதுகின்றது. உலக சமூகத்தை ஏமாற்ற வாயளவில் பொதுக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டதாகக் கூறிவிட்டு அதை நடைமுறைப்படுத்தாதுவிடும் வழமையான சதி அரசியலைச் செய்யவே சிங்கள அரசு முனைகிறது."**

**- இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.**

அந்த அமைப்பின் உத்தியோகபூர்வ சஞ்சிகையான 'விடுதலைப் புலிகள்' மாத இதழின் சித்திரை - வைகாசிக்குரிய பதிப்பின் ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

'புலிகளின் குரல்' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ள இந்த ஆசிரிய தலையங்கத்தின் முழு விவரம் வருமாறு:-

உலகை சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள் ஆகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வைப் புதுப்பிக்க உதவும் நல்லெண்ணத்துடன் பெருமெடுப்பில் நிதி உதவிபுரிய உலகை சமூகம் உடனடியாகவே முன்வந்தது. இந்தப் பெருநிதியைச் சரிவரப் பகிர்ந்து கண்காணிக்க சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று உலகை சமூகம் விரும்பியது. எனினும், இன்றுவரை அப்படி ஒரு கட்டமைப்பை ஏற்றுக்கொள்ள சிங்கள அரசு தயாராக இல்லை.

பொதுக்கட்டமைப்பொன்று உடனடியாகவே உருவாக்கப்படவேண்டும் என்பதில் புலிகள் இயக்கம் உறுதியாகவே உள்ளது. அதன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை அலுவலகம் மீது கிரனேட் வீச்சு!

அம்பாறை.மே21

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் விடுதலைப் புலிகளின் பிரதேச அரசியல் துறை அலுவலகத்தின் மீது நேற்று மாலை 4 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இனந் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளின் இயக்க அரசியல் பிரிவு உறுப்பினர்கள் மூவர் காயமடைந்துள்ளனர் அவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அரசியல்துறை அலுவலகத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச்சென்றனர் என்றும் - தம்மை அடையாளம் காட்டாதவாறு அவர்கள் தலைக்கவசம் அணிந்திருந்தனர் என்றும் - கூறப்படுகின்றது. (ஒ-12)

## செம்பியன்செல்வன் காலமானார்!

யாழ்ப்பாணம்,மே21



இலங்கையின் மூத்த எழுத்தாளரும் இலக்கியவாதியுமான ஆ.இராஜகோபாலன் (செம்பியன் செல்வன்) நேற்றுக் கொழும்பில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது62.

நாவல், சிறுகதை, நாடகம் உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை, மேடைப் பேச்சு, ஆன்மீகம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர், ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றி யாழ்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் பதற்றம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

## நேற்று இரு தமிழர்களுக்கு வாள்வெட்டு!

திருகோணமலை,மே21

திருகோணமலை நகரப் பகுதியில் திடீரென நிறுவப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலையால் ஏற்பட்ட பதற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஆங்காங்கே இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இவை மேலும் அதிகரித்து இன வன்முறையாகப் பரவக்கூடும் என்ற அச்சம் தீவிரமடைந்துள்ளது.

நேற்று நடந்த வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றில் வெட்டுக்காயங்களுக்குள்ளான இரு தமிழர்கள் திருகோணமலை வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். வேறு சில இடங்களில் கிரனேட்டுக்கள் வெடித்துள்ளன.

நகரின் பஸ் நிலையமருகே ஓட்டோ தரிப்பிடத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றக்கோரி நடத்தப்பட்டுவரும் ஹர்த்தால் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. சிலை அகற்றப்படும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என்று பேரவை எச்சரித்துள்ளது.

தொடர்ந்து நடக்கும் இந்தக் ஹர்த்தாலால் திருமலை முழுவதும் தொடர்ந்து முடங்கிக் கிடக்கிறது. இதனால் மக்கள் பெரும் அவலங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நகர் மற்றும் அதனை அண்டியுள்ள இடங்களில் ஒரு கடை மிச்சமின்றி அனைத்துக் கடைகளும் மூடப்பட்டுள்ளன. அத்தியாவசியப் பொருள்களைக் கூடக் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் மக்கள் அவலப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

வங்கிகள் அனைத்தும் நான்கு நாள்களாக மூடப்பட்டுள்ளன. மாத இறுதியில் சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொள்வதிலும் அரச ஊழியர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். திருகோணமலைநகரப் பகுதியிலுள்ள அனைத்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி பாதிப்பை சீர் செய்ய யாழ். மாவட்ட மட்டத்தில் குழு

யாழ்ப்பாணம்.மே21

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்களை இனங்காண்பதற்காக மாவட்ட மட்டத்தில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வருமானத்தை மீளக் கட்டி எழுப்புவதற்கான துரிதசெயலணி(TAFREN)யின் அதிகாரிகளும் யாழ். மாவட்ட அதிகாரிகளும் கலந்துகொண்ட கூட்டம் நேற்றுக்காலை இடம்பெற்றது. அதன் - போதே இக்குழு அமைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் யாழ். செயலகத்தில் இக்கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தில் செயலணியின் பணிப்பாளரான தர்மசிறி விக்கிரமதிலக, ஆலோசகர்களான போல் பிரட்டிஷா றோல்ட் சிசிலமலி அகியோர் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவான வருமானத்தை மீளப்பெற்றுக்கொள்ளும் வகையில் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வருமானத்தை ஈட்டுவதற்குமான செயற்றிட்டத்தை முன்னெடுக்க அரச அதிபர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவில் உள்ளூர் அரச சார்பற்ற நிறு

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு முன்பாக திருமலையில் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை, மே21

திருகோணமலை, ஏகாம்பரம் வீதியில் வசிக்கும் 10ஆம் குறிச்சி பொதுமக்களும் மீனவர்களும் தமக்குப் பாதுகாப்பு வழங்கும்படி கோரி கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிங்களப் பேரினவாதிகளால் தங்கள் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தனர். அச்சுறுத்தல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களின் பிரதிநிதிகளை அழைத்து கண்காணிப்புக் குழுவினர் பேச்சு நடத்தினர். தமது பகுதிகளில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சிலர் கூரிய ஆயுதங்களுடன் இரவுவேளைகளில் நடமாடுகின்றனர் என்றும் - தமிழர்களை அச்சுறுத்தும் விதத்தில் அவர்கள் நடந்துகொள்கின்றனர் என்றும் - மக்கள் சார்பில் கண்காணிப்புக் குழுவினருக்கு விளக்கப்பட்டது. தமது பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டன என்றும் அவர்கள் தெரிவித்தனர். அதனால் உயிர்ச் சேதங்கள் ஏற்படாத போதும் வீடு மற்றும் சுவர் என்பன சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த கண்காணிப்புக் குழுவினர் தாங்கள் பொலீஸார் மற்றும் படையினரோடு கலந்து பேசி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள் எனத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

## வர்த்தக நிலையப் பணியாளர் விவரத்தை படையினர் திரட்டுவது யுத்தநிறுத்த மீறல்!

### கண்காணிப்புக் குழுவிடம் இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மே21

வர்த்தக நிலையங்களில் பணிபுரிபவர்களின் விவரங்களைப் படையினர் திரட்டுவது ஒரு யுத்தநிறுத்த மீறல்.

இவ்வாறு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மாதாந்த சந்திப்பு நேற்றுக்காலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே சி.இளம்பரிதி இக்குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இரு தரப்புப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கென கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பொது அமைப்புகளின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ், சுனாமி அனர்த்தப் புனர்வாழ்வுச் செயலகப் பணிப்பாளர் எஸ். பாலையா, வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பாளன் ஆகியோரும் படைத்தரப்பில் பிரிகேடியர் ரட்ணாயக்கா, யாழ். மாவட்டப் பொலீஸ் அத்தியட்சகர் டல்பதாது ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சி.இளம்பரிதி அங்கு மேலும் கூறியதாவது:-

யாழ். நகரிலும் அதனை அண்டியுள்ள பிர

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளின்டன் விஜயம்

கொழும்பு,மே21

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார். ஐ.நா.செயலாளர் நாயகத்தின் சுனாமி நிவாரணப் பணிகளுக்கான சிறப்புத் தூதுவராகவே இலங்கையில் இருநாள்கள் தங்கவுள்ள கிளின்டன் சுனாமி நிவாரணப் பணிகளை பார்வையிடுவார். (ஒ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



குமுதினிப் படகுப் படுகொலையின் இருபதாம் ஆண்டு நினைவு தினமான கடந்த சனிக்கிழமை நெடுந்தீவில் நினைவு ஊர்வலம் இடம்பெற்றது. படகுப் படுகொலையில் பலியானவர்களின் உருவப் படங்கள் மற்றும் குமுதினிப் படகின் மாதிரி வடிவம் ஆகியவை ஊர்வலத்தில் எடுத்துவரப்படுவதை முதலிரண்டு படங்களில் காணலாம். அங்கு இடம்பெற்ற நினைவு நிகழ்வில் படகில் படுகொலையானவர்களில் ஒருவரான தனது மகளுக்குத் தந்தை ஒருவர் அஞ்சலி செலுத்துவதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள் : நல்லூர் செய்தியாளர்)

# யாழ்.வலய ஆசிரியருக்கு இன்று சம்பளம்

யாழ்ப்பாணம்,மே21

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு இன்று சம்பளம் வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் இன்று சனிக்கிழமை தத்தமது பாடசாலைகளுக்குரிய சம்பளப் பட்டியல்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, வங்கியில் சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் -

சம்பளக் கொடுப்பனவுகளுக்காக யாழ். இலங்கை வங்கிக் கிளைகள் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை திறந்திருக்கும் என்றும் - யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் ஹர்த்தால் மற்றும் சூழ்நிலை காரணமாக அங்குள்ள அரச அலுவலகங்கள் மற்றும் வங்கிகள் செயற்படாமலுள்ளன. இதனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயங்கும் திணைக்களங்கள் மற்றும் கல்வித் திணைக்களுக்கு இம்மாதச் சம்பளத்தை வழங்குவதற்குரிய கட்டுநிதி திருகோணமலையில் இயங்கும் தலைமை அலுவலகங்களால் உரிய திணைக்களங்களுக்கு நேற்றுவரை அனுப்பிவைக்கப்படவில்லை. அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் இம்மாதச் சம்பளக் கொடுப்பனவுக்குரிய திகதி நேற்றாகும்.

இதேவேளை,

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயங்கும் மத்திய அரசு சேவையைச் சேர்ந்த ஊழியர்களின் இம்மாதச் சம்பளக் கொடுப்பனவு நேற்றைய தினம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-51)

# வற்றாப்பளை வாகனங்களுக்கு பயணப் படிவம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே21

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் விழா தினத்தன்று போக்குவரத்தில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கு பயணப் படிவங்களை வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை இடம்பெறுகிறது. இதனையொட்டி வற்றாப்பளைக்கு சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் முகமாலை சோதனைச் சாவடியில் பயணப் படிவம் பெறுவதில் தாமதம் ஏற்படக்கூடும் இதனைத் தவிர்க்கும் வகையில் பயணப் படிவங்களை முன்கூட்டியே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி சிற்றூர்திகள் மற்றும் பயணிகள் வாகனங்களின் உரிமையாளர்களோ சாரதிகளோ தத்தமது சிற்றூர்திச் சங்கங்களின் மூலம் பயணப் படிவங்களை பெற்றுக்கொள்ளமுடியும். இதன்மூலம் பயணப் படிவத்தை முன்கூட்டியே பெற்று பயணிகள் விவரத்தைப் பூர்த்தி செய்து கால விரயத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## காணாமற்போனோர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே21

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நடைபெறுமென சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார் சங்க உறுப்பினர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே21

சரவணை கொட்டாங்காடு ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிசேக தினத்தன்று வைரவப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெறும். (203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே21

சங்கானை சிலம்புப் புளியடி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7 மணிக்குக் கந்தபுராணம் எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசீதரன் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவார். (3-133)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே21

காரைநகர் வடக்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பார்த்திப வருட பெருந்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே21

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா அடுத்த மாதம் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் அடுத்தமாதம் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் 23ஆம் திகதி தெப்பத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3-203)

★ ★ ★

வலி.தெற்கு,மே21

கோண்டாவில் நெட்டிலிபபாய் பிள்ளையார் கோயிலில் வைகாசி விசாக பூரணை தினமான நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்குத் திருவிளக்குப் பூசை நடைபெறவுள்ளது.

திருவிளக்குப் பூசையில் கலந்துகொள்ளும் அடியவர்களுக்கு மகாலட்சுமி அம்பாளின் பிரசாத நூல் வழங்கப்படும். (3-152-203)

★ ★ ★

தொல்புரம்,மே21

தொல்புரம் மத்தி கொட்டியம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3-119-203)

★ ★ ★

கிளிநொச்சி,மே21

கிளிநொச்சி சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிசேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவர். (3-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே21

வேலணை மேற்கு பெரியபுலம் அருள்மிகு ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3-203)

★ ★ ★

### பொதுக்கட்டமைப்புத் தொடர்பான

# ஜனாதிபதியின் திட்டத்திற்கு சு.க.மத்திய குழு அங்கீகாரம்!

கொழும்பு,மே21

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பொன்றை விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து உருவாக்குவது தொடர்பான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் திட்டத்திற்கு முழுமையாக ஒத்துழைப்பை வழங்குவதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியின் தலைமையில் நான்கு மணி நேரம் கூடி ஆராய்ந்தது. தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் உத்தேச பொதுக்கட்டமைப்பு ஆகியன குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்தான தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி இக்கூட்டத்தில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், இதுவிடயத்தில் ஜே.வி.பி. தெரிவித்துவரும் எதிர்ப்புக் குறித்தும் பல உறுப்பினர்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டனர்.

ஜனாதிபதியின் இந்த முயற்சிகள் சமாதானச செயற்பாடுகளுக்கும் உத்வேகமளிப்பதால் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்தது.

இதேபோல் இலங்கை அபிவிருத்தி மாநாடு கண்டியில் நடைபெற்றபோது ஜனாதிபதி அங்கு ஆற்றிய உரை, சர்வதேச சமூகத்தினர் இலங்கைக்கு வழங்கிய பெரும் உதவிக்கு ஜனாதிபதி ஆற்றிய பங்களிப்பு என்பனவற்றிற்கு நன்றி செலுத்தும் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மள் கட்டுமானப் பணிகள் பெரும்பாலான இடங்களில் மந்தகதியில் இடம்பெற்று வருவதால் அதுகுறித்து ஆராய்வதற்கான விசேட குழுவொன்றை நியமிப்பதற்கும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்பது தொடர்பில் ஜனாதிபதி அங்கு விரிவாக கலந்துரையாடினார். இதன்போது கட்சியின் செயல்திறனற்ற 15 அமைப்பாளர்களை அந்தப் பதவியிலிருந்து நீக்கி புதிய அமைப்பாளர்களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# ஜே.வி.பி. அமைச்சரிடமிருந்து தொழிற்சங்கப் பதவி பறிப்பு

கொழும்பு,மே21

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் ரீதியாக முக்கியமான தீர்மானங்களை எடுக்கப் போகின்றார் என அரசியல் வட்டாரங்களில் பரவலாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில் ஜனாதிபதியின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தனது கட்சிக்குள் சில மாற்றங்களைச் செய்வதற்கு ஜே.வி.பி. தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதன் முதற்கட்டமாக ஜே.வி.பியின் பலம்வாய்ந்த தொழிற்சங்கங்களுக்குத் தலைமை வகித்த ஜே.வி.பி. அமைச்சரான கே.டி.லால்காந்தவை அந்தப் பதவியிலிருந்து விலக்கியிருக்கும் ஜே.வி.பி. அந்த இடத்திற்கு களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்கவை நியமித்திருக்கிறது.

ஜே.வி.பியின் பலம்வாய்ந்த இந்தத் தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு இதுவரை பெரும் தொல்லையாக இருந்துவருகிறது. இந்தத் தொழிற்சங்கத்திற்குத் தலைமை வகித்துச் செயற்பட்ட அமைச்சர் லால்காந்த மீதும் அரச தலைமைத்துவம் அதிருப்தி கொண்டிருந்தது. இவ்வாறான சூழ்நிலைகளின் பின்னணியில்தான் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஜனாதிபதியின் நல்லெண்ணத்தை வென்றெடுக்க முடியுமென ஜே.வி.பி. கருதுவதாக அக்கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

• இதேவேளை, இந்த மாற்றம் தொடர்பில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலர் அதிருப்தியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடு ஜே.வி.பியை தொழிற்சங்க ரீதியில் பாதிக்குமென்று பலர் கருத்து வெளியிட்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே21

கியூடெக் நிறுவனத்தின் மானிப்பாய் பிராந்திய சமாதானக் குழு உறுப்பினர்களுக்கு 'உருவாகும் இளையவர்கள்' என்ற பொருளிலான கருத்தரங்கு நாளை 22ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கியூடெக் இயக்குநர், அருட்பணி சி.ஜி.ஜெயக்குமார், போதகர் ஜோய் மற்றும் திருமறைக் கலாமன்றம், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றின் வளவாளர்கள் கலந்து நெறிப்படுத்துவார்கள். (ஒ-12)

# கரவெட்டியில் நாளை மாட்டுவண்டில் சவாரி

கரவெட்டி,மே21

பிரபல மாட்டு வண்டிச் சவாரியாளர் செ. இளையதம்பியின் நினைவாக கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி சோனப்பு விளையாட்டு மைதானத்தில் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி நடைபெறவுள்ளது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சுகாதார பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சிப் பணிப்பாளர் வி.இராசையா, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், கரவெட்டி பிரதேச செயலர் வி.சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-70-203)

# 34 நிலையங்களில் இன்று பட்டதாரி ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே21

தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான போட்டிப்பரீட்சை இன்று யாழ்ப்பாணத்தில் 34 பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருக்கின்றது.

இன்று காலை 10 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் தோற்றவுள்ளனர் என யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

# ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அரசமைப்பை ஆதரிக்கும்படி பிரான்ஸ் மக்களிடம் கோரிக்கை

லண்டன்,மே21

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பிரேரிக்கப்பட்டுள்ள அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி பிரான்ஸ் மக்களுக்கு பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் போலந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்னும் சில நாள்களில் பிரான்ஸில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் அரசியல் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதா இல்லையா என பிரான்ஸ் மக்கள் தீர்மானிக்காத நிலையிலேயே மேற்படி குறிப்பிட்ட தலைவர்கள் இவ்வாறு கோரியுள்ளனர்.

ஆசமைப்பு தேவை என தனிப்பட்ட ஆதரவை வழங்கியுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி ஜெக் ஷிராக் இந்த நிலைப்பாட்டுக்கு ஜேர்மனி, போலந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் மிகுந்த ஆதரவைத் தெரிவித்துள்ளனர் என்று கூறினார்.

பிரான்ஸ் நாட்டவர்கள் ஏனைய ஐரோப்பியர்களைக் கைவிடக்கூடாது என ஜேர்மனியின் ஜனாதிபதி ஜெர்காட் ஸ்ரூடரும் -

இந்த அரசியலமைப்பு போலந்துக்கும், ஐரோப்பாவிற்கும் மிக முக்கியமானது என போலந்து தலைவர் அலெக்ஸாண்டர் ஹேவஸனிவ்ஸ்கியும் மூன்று தலைவர்களும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளனர்.

இந்த அரசியலமைப்பை எதிர்க்கும் வாக்கு கள் குறைந்தளவில் இருந்தாலும் திடமான முன்னணியைப் பெறும் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஐரோப்பிய ஒற்றுமை சம்பந்தமான ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தும் என்றும் -

சந்தேகத்துடன் இருக்கும் வாக்காளர்களுக்கு ஒரு பலத்தைக் கொடுக்கும் என்றும் - பிரான்ஸ் ஜனாதிபதி ஜெக் ஷிராக் எதிர்பார்க்கிறார் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-3)

# இந்தோனேசிய ரயில் விபத்தில் ஏழுபேர் உயிரிழப்பு!

ஜகார்த்தா,மே21

இந்தோனேஷியாவின் சுமத்திராதீவில் பயணிகள் ரயிலொன்று சரக்கு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலைநகர் ஜகார்த்தாவிற்கு வடகிழக்கே சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் நேற்று முன்தினம் இந்த விபத்து ஏற்பட்டதென தெரிவிக்கப்படுகிறது. ரயிலுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என பொலீஸ் உயர் அதிகாரி அப்துல் முவைஷ தெரிவித்தார். (ஐ-க)



# ஆண்டுதோறும் 5 லட்சம் இந்தியர்களை மலேசியாவிற்கு வரவழைக்கத் திட்டம்

கோலாலம்பூர்,மே21

இந்தியாவில் இருந்து ஆண்டுதோறும் 5 லட்சம் சுற்றுலாப் பயணிகளை மலேசியாவுக்கு வரவழைக்கும் வகையில் மலேசிய அரசு திட்டம் தீட்டியுள்ளது என்று மலேசிய சுற்றுலாத்துறை துணை அமைச்சர் டத்தோ அகமது ஜாகித் ஹமிதி தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து மலேசியாவுக்கு முதல் முறையாக 'ஜெட் ஏர்வேஸ்' நிறுவனம் விமான சேவையை ஆரம்பித்துள்ளது. இந்த நிகழ்வின்போதே மலேசிய சுற்றுலாத்துறை துணை அமைச்சர் டத்தோ அகமது ஜாகித் ஹமிதி கோலாலம்பூரில் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

மலேசியாவுக்கு வர சென்னையில் இணையத்தளம் மூலம் விசா வழங்கப்படுவதுபோல ஜூன் மாதம் முதல் டில்லியிலும் வழங்கப்படும். இதற்காகப் பயணிகள் நிறுவனங்கள் ஒவ்வொரு விசாவுக்கும் 3 லட்சம் ரூபா வங்கி உத்தரவாதம் கொடுக்கவேண்டும் என்ற முறை அவர்கள் கோரிக்கைக்கேற்ப ரத்துச்செய்யப்பட்டது.

2003ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து மலேசியாவிற்கு ஒரு லட்சத்து 45ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வந்தனர்.

2004ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 72 ஆயிரம் பயணிகள் வந்தனர்.

இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதத்தில் மட்டும் 30 ஆயிரம் பயணிகள் வந்தனர்.

இந்தியாவிலிருந்து அடுத்த சில ஆண்டுகளில் ஆண்டுக்கு 5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வரும்வகையில் மலேசிய அரசு முயற்சிகளை மேற்கொண்டு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

இதற்காக மலேசிய சுற்றுலாத்துறை அமைச்சர் லியோ மைக்கேல் தொயாத்தலைமையில் ஒரு தூதுக் குழு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் சென்னை, மும்பை, டில்லி, பெங்களூர், ஐதராபத், கல்கத்தா ஆகிய நகரங்களுக்குச் செல்ல இருக்கிறது.

இங்குள்ள சுற்றுலாத் தலங்களை விளம்பரப்படுத்த சினிமா நட்சத்திரங்களை வரவழைக்கிறோம். மலேசியாவில் கைக்கடிகாரங்கள், வாசனைத் திரவியங்கள், கெமராக்கள் ஆகியவற்றுக்கு வரி இல்லை என்று மலேசிய அமைச்சர் கூறினார். (ஐ-க)

# சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்திற்கு இந்திய மத்திய அமைச்சரவை அனுமதி

புதுடில்லி,மே21

சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்துக்கு இந்திய மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என மத்திய கப்பல்சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திலேயே சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டதென அவர் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அனுமதியின் மூலம் 145 ஆண்டுகளாக கிடப்பில் இருந்த சேது சமுத்திரத் திட்டம் நடைமுறை வடிவம் பெறுகிறது. நிதிச்செலவு உட்பட இத்திட்டத்திற்கு மொத்தம் சுமார் ரூ.4854,80 கோடி செலவிடப்படும்.

மனனார் வளைகுடாவையும் பாக்கு நீரிணையையும் இணைக்கும் இத்திட்டம் மூன்றரை ஆண்டுகளில் முழுமையாக நிறைவேற்றப்படும்.

உடனடியாக இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பாக்கு நீரிணைப் பகுதியில் ஆழப்படுத்தும் பணிகள் பொதுத்துறை நிறுவனமான இந்திய அகழ்வுப்பணி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கான நிதி ஆதாரங்களைத் திரட்ட சேது சமுத்திர நிறுவனம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றும் பணியை தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் ஏற்றுள்ளது.

சேது சமுத்திர நிறுவனத்தில் ரூபா ஆயிரம் கோடி பங்குகளை இந்திய அரசு பெற்றிருக்கும்.

தூத்துக்குடி, சென்னை, விசாகப்பட்டினம், பாரதீப் ஆகிய துறைமுகப் பொறுப்புக் கழகங்களும், எண்ணூர் துறைமுக நிறுவனமும் இதில பங்குதாரர்களாக உள்ளன.

இந்திய கப்பல் கழகமும் இந்திய அகழ்வுப் பணி கழகமும் பங்கேற்றுள்ள சேது சமுத்திர நிறுவனத்தின் ரூ.1052கோடி பங்குகள் தனியார் மூலம் திரட்டப்படும்.

சேது சமுத்திர கால்வாயின் மொத்த நீளம் 167 கிலோமீற்றர் இதில் 89கிலோமீற்றர் தொலைவுக்கு மட்டுமே அகழ்வுப்பணி மேற்கொள்ளப்படும். எஞ்சிய தூரத்துக்கு கடலில் போதுமான ஆழம் உள்ளது. (ஐ-க)

# குமரி மாவட்டத்தில் திடீர் கடல் கொந்தளிப்பு

நாகர்கோவில்,மே21

இந்திய தமிழகத்தின் குமரி மாவட்டத்தில் கொல்லங்கோடு எனும் இடத்திற்கு அருகிலுள்ள மார்த்தாண்டம் துறையில் நேற்று அதிகாலை 5மணியயவில் திடீரென ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் அங்கிருந்த சுமார்300 வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து உறங்கிக்கொண்டிருந்த மீனவர்கள் தமது குழந்தைகளை சுமந்துகொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடல் கொந்தளிப்பினால் பல வீடுகள் சேதமடைந்தன. மார்த்தாண்டம் துறையில் உள்ள புனித வியாகுல மாதா தேவாலயத்தில் பங்குக் குரு பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.(ஐ-க)

# காஷ்மீர் பிரச்சினை தீர்வு விரைவில்

## பாக். அமைச்சர் கருத்து

கோலாலம்பூர்,மே21

இந்திய காஷ்மீர் மாநில பிரச்சினைக்குத் தீர்வுகண்டு இருதரப்பும் உடன்பாட்டை எட்டுவதற்கான காலம் கனிந்துவிட்டது என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் கசூரி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், பாகிஸ்தான் திரும்பும் வழியில் நேற்றுமுன்தினம் கோலாலம்பூரில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போதுள்ள இணக்கமான சூழ்நிலையை நன்றாகப் பயன்படுத்தி நீண்டகாலமாய் இருந்துவரும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருநாட்டுத் தலைவர்களும் துணிச்சலுடன் செயற்பட்டு உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும். அதன் மூலம் அமைதிக்கு உதவும் வகையில் நாமனைவரும் செயற்படவேண்டும் என்று அவர் கூறினார். (ஐ)

# உஸ்பெகிஸ்தானில் நடந்த வன்முறை பற்றிய விசாரணையை அந்நாட்டு ஜனாதிபதி நிராகரிப்பு

லண்டன்,மே21

உஸ்பெகிஸ்தானில் கடந்தவாரம் ஏற்பட்ட வன்முறை ஆர்ப்பாட்டங்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு சர்வதேச சமூகம் விடுத்த கோரிக்கையை அந்நாட்டு ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது அவரது துருப்புக்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதனை அரசு மறுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து சர்வதேச சமூகம் விசாரணை நடத்துமாறு கூறியதையே அந்நாட்டு ஜனாதிபதி மறுத்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களுடன் தொடர்புடைய 146 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால், 800 பேர் வரை கொல்லப்பட்டனர் என நேரில் கண்ட பலர் தெரிவித்துள்ளனர்..

இதுபற்றி விசாரணை செய்யுமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். (ஐ-க)

# இத்தாலி மலைச் சிகரத்திற்கு மறைந்த பாப்பரசரின் பெயர்

வத்திக்கான்,மே21

இத்தாலியிலுள்ள ஒரு மலைச்சிகரத்திற்கு மறைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இத்தாலியிலுள்ள கிரான் சாகோ மலையிலுள்ள ஜெண்டார்மே என்ற சிகரத்திற்கே மறைந்த பாப்பரசரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி மறைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் 85 ஆவது பிறந்த நாளாகும். இந்தப் பிறந்தநாளின்போது அங்குள்ள தேவாலயத்தில் நடைபெற்ற விழாவில் இந்த மலை சிகரத்திற்கு மறைந்த பாப்பரசரின் பெயர் சூட்டப்பட்டது.

27 ஆண்டுகளாக பாப்பரசராக இருந்த இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மலைகளை மிகவும் நேசித்தவர். அவர் இளைஞனாக இருந்தபோது மலையேறுவதில் ஆர்வமுடையவராக காணப்பட்டார் என்றும்-

மலையின் அழகினால் ஈர்க்கப்பட்டு அடிக்கடி வத்திக்கான் தலைநகரைவிட்டு மலைப் பகுதிக்குச் சென்று அதன் அழகில் லயித்திருப்பார் விசேட விதமாக இத்தாலியின் மையப்பகுதியில் உள்ள கிரான்சாசோ மலைப் பகுதிக்கு தனிப்பட்ட முறையில் சென்று வருவார் என்றும் - வத்திக்கான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)




# அதிகமாக தண்ணீர் அருந்துவதால் மரணம்

## அமெ. பத்திரிகை திடுக்கிடும் செய்தி

வாஷிங்ரன்,மே21

அதிகளவு தண்ணீர் அருந்துவதனால் விரைவில் மரணம் ஏற்படும் என அமெரிக்க உணவு தொழில்நுட்ப நிறுவன பத்திரிகையொன்று திடுக்கிடும் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதிகளவு தண்ணீர், அருந்துவதனால் உடலில் உள்ள சோடியத்தின் அளவு குறைவதனாலேயே விரைவில் மரணம் ஏற்படுகிறது என்று அந்தப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அதிகளவு தண்ணீர் குடித்தால் இரத்தத்தில் உள்ள சோடியத்தின் அளவு குறையும் இந்தக்குறைப்பாட்டால் மரணம் நேருகிறது.

'ஹைபோனட்ரிமியா' என்று பெயரிட்டுள்ள இந்த சோடியம் குறைபாட்டினால் இயல்பான நிலையை விட உற்சாகமின்மை, குழப்பம், கவலை போன்ற வெளிப்பாடுகள் ஏற்படும் என்றும்-

ஆனால், இவற்றை நீர்ச்சத்துக் குறைவினால் ஏற்படும் அறிகுறி எனத் தவறாக நினைத்து கூடுதலாக நீரை மக்கள் அருந்துகின்றனர். இதனால் நிலைமை மேலும் மோசமடைகிறது என்றும் அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகாராஷ்ட்ராவில் கடும் வெப்பம்

யவத்மல்,மே21

இந்திய மகாராஷ்ட்ரா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பத்தினால் மூவர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மகாராஷ்ட்ரா மாநிலத்தின் விதார்பா என்னும் இடத்தில் வெப்பம் 110 பாகை பரனைட் மேல் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெப்பத்தில் உக்கிரம் தாளாது நேற்று முன்தினம் மூவர் உயிரிழந்தனர் என்றும் -

இதேபோன்று இந்தியாவின் பல மாநிலங்களில் வெப்பம் அதிகமாக காணப்படுவதனால இந்த மாதத்திலேயே பலர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

12xxxx தொடர் இலக்கமுடைய மிட்சுபிசி லான்சர் சிவப்புநிற கார் விற்பனைக்குண்டு. (Full Option) தொடர்பு: 0777 758147, 0773249711. (44468)

21′ LG TV Minolta - 70 Zoom with Remote Control புதியரகம் பாவிக்கப்படாதது விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி (சுன்னாகம்) T.P.: 0776341473, 077-6258566. (45631)

நல்ல நிலையில் உள்ள Suzuki - Gs 125 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (சி-42947)

## கடை விற்பனைக்கு

பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி தியாகு கலைக்கூடத்திற்கு முன்பாக உள்ள கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 325, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. T.P.: 021 222 6469 (வீதிச் சான்றிதழ் பெற்ற கடை). (45651)

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதியில் நல்லூர் Cross Roadஇற்கு அண்மையில் 5 பரப்புக் காணி 3000 சதுர அடி வரையிலான விஸ்தீரணம் உள்ள வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 - 706461.(45487)

நெடிமால, இறப்பர்வத்தை பெப்பிலியான வீதியில் (தெகிவளை விஷ்ணு கோயிலுக்கு அருகில்) 15 பேர்ச் விஸ்தீரணமுள்ள 06 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய 27/52, ஆம் இலக்க வீடு விற்பனைக்குண்டு. நேரடி தொடர்புக்கு: T.P.: 112 - 730590. (45654)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், கல்பேட இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (45330)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) - தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45626)

புறொயிலர் 1Kg 180/- சுத்தம் செய்தது. 270/- கல்பேட் 1kg 180/- மற்றும் புறொயிலர் குஞ்சு, கோழி எரு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K Farm பெரிய மதவடி மானிப்பாய் வீதி, உடுவில். (45670)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அதிவிசேட பிறீமா சிவப்பு, பேட்டுக்குஞ்சுகள உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P.: 222 2867, 222 3529 (45630)

## தவறிவிட்டது

வேலணை கிழக்கைச் சேர்ந்த கந்தையா தேவராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல.302211345X யாழ்ப்பாணத்திற்கும் வேலணை வங்களாவடிக்கும் இடையில் மினிபஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'மயூரா ஸ்ரோர்ஸ்' 130, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (45659)

குட்வில், ரக்ரரில் யாழ்ப்பாணத்திலிருந்து (769 பஸ்பாதையூடாக) மல்லாகம் சந்தி வழியாக அளவெட்டிக்கு பொருள்கள் ஏற்றிச் செல்லும் பொழுது 03 எஸ்லோன் பீலிகள் தவறிவிழுந்து விட்டன. தயவு செய்து தகவல் தரவும். தொடர்பு: 077 3222727. (45653)

## தோட்டம் பராமரிப்பாளர் தேவை

தோட்டம் ஒன்றைப் பராமரிக்க அனுபவம் உள்ள தொழிலாளியோ/சிறிய குடும்பமோ விரும்பத்தக்கது. தங்குமிட வசதியும் உண்டு. நேரில் வரவும். தொடர்பு 40, கண்டி வீதி, சுண்டுக்குளி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக, யாழ்ப்பாணம். (45488)

## வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார்கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு 360/10, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். 0777-593722, 0776 - 991899 (45345)

## காணவில்லை

எனது வீட்டில் அன்பாக வளர்த்த நரை நிறமுடைய 1½ வயது நிரம்பிய பசுக்கன்று காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு மவுண குரு விஜயதெய்வேந்திரன, 66/12, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (45669)


## விற்பனையாகிறது

O/L சமூகக்கல்வியும் வரலாறும் பாடத்திற்குரிய 1100 வினாவிடைகள் கொண்ட புதிர்ப்பெட்டி

விலை 75/= மட்டுமே

**World Disk**

உலக நாடுகளின் விவரங்கள் பலவற்றை இலகுவாக அறியக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

விலை 50/= மட்டுமே

கிடைக்குமிடம்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(C/42941) T.P.: 222 2573 (21-18-15)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி.42495)


# 165 ஆம் நாள் நினைவஞ்சலி



தாய்மடி 06 - 11 - 1936

இறைவனடி 11 - 12 - 2004

அமரர்

## எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்

(மறவன் மாஸ்ரர்)

இவரது ஆன்மசாந்தக்காக 23-05-2005 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குத் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்தத் திருப்பலியிலும் அதையடுத்து அன்னாரது இல்லத்தில் இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தாளையடி. (சி-42951)(26-18-21-15)

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 20 - 06 - 1937

மறைவு 21 - 04 - 2005

## திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்

21.04.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று [21.05.2005] சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காந்திஜீ வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (45607) (39-21-18-15)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் முன்னாள் தலைவர்

**திரு.த.தேவராஜனின் பாசமிகு தாயார்**

**திருமதி தம்பிப்பிள்ளை இராசம்மா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் வடக்கு, சுன்னாகம். (45658) (21-15-18)

தமிழ் ஒளி சனசமூக நிலையம்.

# மரண அறிவித்தல்

## பொன்னையா சிவாலிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய பொன்னையா சிவாலிங்கம் 17-05-2005 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னலட்சுமி தம்பதியினரின் அருமை மகனும கமலவேணியின் அன்புக் கணவரும் சுகந்தி, சுபா, கஜன், சுரேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பிறேம்தாஷன், குருபரன், ஷென்நத்தெலி ஆகியோரின் மாமனாரும காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் ஜெயராணி (இலங்கை), ஜீவராணி (இலங்கை), வன்னியசிங்கம் (பிரான்ஸ்), குணராணி (இலங்கை), தனபாலசிங்கம் (ஜேர்மனி), றஞசினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரத்தினம், காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் குகராசபதி, தர்மதேவி, ஆராஅமுதன், கலாஜோதி, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-05-2005 புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி குணபாலசிங்கம் ஜெயராணி (சகோதரி).

259/5, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை. T.P.: 0776005387. (45676)(26)

# மரண அறிவித்தல்

## முருகேசு செல்வநாயகம் [ரிங்கர்]



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இராஜசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வநாயகம் அவர்கள் 17.05.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் வீரபாகு - சின்னமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் மதிவதனி (ஜேர்மனி), மதியழகன் (பிரான்ஸ்), மதுமதி (நெதர்லாந்து), மதிமதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற மதிமலர், மதிவண்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராஜா, வசந்தகோகிலம், லீலாவதி, ஆனந்தராஜா, விஜயராணி, ஜெயராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவீந்திரராஜா (ஜேர்மனி), நிர்மலா (பிரான்ஸ்), புஸ்பராஜா (நெதர்லாந்து), மாலினி ஆகியோரின் மாமனாரும் ஜெயதேவி, செல்வமாணிக்கம், கிளறன்ஸ், ஆன் வசந்தா, பத்மநாதன், பத்மாதேவி, யோகாம்பிகை, தங்கவடிவேலு, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் சுகர்ணா, காருண்யா, மிதுனன், நிரூஷன், மிரூணா, சாரூஷன், மதுஷா, ஆரூஷன், நிந்துஷா, தேவவினோத், தேவஷொபினா, தேவஅபினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11/13, இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணம். (45666)(21-18-15-39)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## ஆடு வளர்ப்பிற்கு நிதியுதவி

வலி.தெற்கு, மே21

ஆடுகள் இன விருத்தித் திட்டத்தின கீழ் ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனம் வலி.வடக்கு பிரிவில் உள்ள இரண்டு பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

மணற்புலம் அளவெட்டியைச் சேர்ந்த க.ஆறுமுகம் மற்றும் பன்னாலையை சேர்ந்த திருமதி மு. அன்னலட்சுமி ஆகிய இரு பயனாளிகளுக்குமே இவ்வாறு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

(எ-152)

## யாழ்.பல்கலையில் ஹிந்தித் திரைப்படம்

யாழ்ப்பாணம்,மே 21

யாழ். பல்கலைத் திரைப்பட வட்டத்தின ஏற்பாட்டில் ஹிந்தித் திரைப்பட இயக்குநர் குருதத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கலை நேர்த்தியான சில திரைப்படங்கள் தொடராகக் காண்பிக்கப்படவுள்ளன.

இத் தொடரின் முதற்படமாக காஹஸ கே.பூல் (காகித மலர்கள்) என்னும் திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

(எ-202)

## மருதங்கேணிக்கு பற்சிகிச்சைக் கதிரை

குருநகர்,மே21

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் பற்சிகிச்சை ஆரம்பிக்க வசதியாக பற்சிகிச்சைக் கதிரை அனுப்பி வைகக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் பற்சிகிச்சையை ஆரம்பிக்க வசதியாக பல் வைத்தியர் ஒருவர் பதில் கடமைபுரிய அங்கு நியமிக்கப்பட உள்ளார் என யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(எ-51)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

தென்மராட்சி,மே 21

சாவகச்சேரி நகர சபையின் பொது நூலக வாசக வட்டத்தினர் மாதாந்தம் முழுநிலாநாள் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர்.

இதன் முதலாவது கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'நிலவு டொட் கொம்' நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் சிவராசா அனுராஜ் கருத்துரை நிகழ்த்துவார்.

(எ-117- 202)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பொதுக் கட்டமைப்பு பொன்னான வாய்ப்பு

2002ஆம் ஆண்டு முற்பகுதியில் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் கடந்த சுமார் மூன்றரை ஆண்டு காலத்தில் நாட்டின் அமைதி நிலைமை இப்போதுதான் மிகமோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது.

திருகோணமலை நிலைமை, எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற மோசமான கட்டத்தை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்குக் கட்டியம் கூறுகின்றது.

ஐந்து தசாப்த கால இனப்பூசலுக்கு அமைதி மார்க்கத்தில் சமாதான வழியில் - பேச்சு மூலமாக- புரிந்துணர்வு அடிப்படையில் - தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் தடைப்பட்டுத் தேங்கி, இனி முன்நகரமாட்டா என்ற இறுக்கமான கட்டத்துக்கு வந்துவிட்டன.

அமைதி முயற்சிகளுக்கு வழி திறக்கும் கதவாக அமையும் என எதிர்பார்க்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு விடயமும் வாய்ப்பேச்சோடு அடிபட்டுப்போகும் நிலைமையே தென்படுகின்றது.

உதவும் நாடுகளின் கூட்டத்திலும், தொலைக்காட்சிக் கலந்துரையாடல்களிலும், பொதுக்கூட்டங்களிலும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி குமாரதுங்க வெளுத்து வாங்கி வருவதைப் பார்ப்போரும், கேட்போரும் மூக்கில் விரலை வைத்து ஆச்சரியத்தில் மூழ்காமல் இல்லை.

தமது அரசுக்கு வெளியில் அல்ல, தமது அரசுக்குள்ளேயே இருக்கும் - தனக்கு எதிரான கருத்துடையவர்களோடு - பொது மேடைகளிலும், பொது நிழ்ச்சிகளிலும் அவர் வாய்ச்சமர் புரிந்து, நிழல் யுத்தம் நடத்திவருவதைப் பார்த்துப் பலரும் சொக்கித்தான் போயிருக்கின்றார்கள்.

ஆனால், இந்த வெற்றுவேட்டு வாய்ச் சவடால் எல்லாம் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு கைவந்த கலை என்பது ஊருக்குத் தெரியாத இரகசியம் அல்ல.

புலிகளோடு சேர்ந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற விருப்பமும், ஆசையும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு இருந்தாலும் இருக்கலாம். ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதற்கான எண்ணமும், பற்றுறுதியும், வலுவும், திடசங்கற்பமும் அவருக்கு உண்டா என்றால் சந்தேகம்தான்.

ஒரு நாளைக்கு நான்கு கோடி ரூபா நஷ்டத்தில் இயங்கும் இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதில் இப்படித்தான் விடாப்பிடி உறுதியாகத் தாம் இருக்கிறார் என முழங்கினார் ஜனாதிபதி. மின்சாரசபை ஊழியர்களின் வேலைநிறுத்த அச்சுறுத்தல், ஜே.வி.பி. எதிர்ப்பு எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு இந்தத் திட்டத்தை முன்னேடுப்பேன் என்று பகிரங்கமாக சூளுரைத்தார். ஒரு சிலரின் மிரட்டலுக்கு அஞ்சி நாட்டு நலனுக்கு அவசியமான முடிவுகளை மேற்கொள்ளாமல் பின்னடிக்க மாட்டேன் என்று தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உறுதியளித்தார். ஜே.வி.பி. அமைச்சர்கள் எழுந்து வெளிநடப்புச் செய்ததையும் பொருட்படுத்தாது அமைச்சரவைக் கூட்டத்தில் அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை நிறை வேற்றியும் காட்டினார். அதையெல்லாம் பார்த்து நாட்டு மக்கள் வியந்துதான் போனார்கள். தனது அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியினரைத் துச்சமென மதித்து ஒதுக்கிவிட்டு தான் எடுத்த முடிவை நடைமுறைப் படுத்துவதில் உறுதியாக இருந்த நாட்டின் தலைவியைப் பார்த்து மக்கள் மெய்சிலிர்த்துப் போனார்கள்.

ஆனால், கடைசியாக நடந்தது என்ன? அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட பத்திரம் கூட பின்னர் அங்கீகரிக்கப்படாமல் கைவிடப்பட்டது. இது விடயத்தில் ஜனாதிபதியின் சூளுரைகள் எல்லாம் வெற்றுவேட்டு உரைகளாகி விட்டன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை இந்திய நிறுவனங்களுக்கு விற்கும் விவகாரத்தில்கூட ஜனாதிபதி சந்திரிகாவின் உறுதிப்பாடு இப்படித்தான் பொலபொலத்துப் போயிற்று.

மின்சாரசபை மறுசீரமைப்பு விடயத்தில் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் நிறைவேற்றுவது வரை போனது போல-

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் ஜனாதிபதியின் போக்கு அந்தக் கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது வரை முன்னேறலாம். அவரது வாய்ப் பேச்சு அப்படி ஓர் எண்ணத்தை - நம்பிக்கையை - எதிர்பார்ப்பைத் தருகின்றது.

ஆனால், அதன்பின்னர் அதை நடைமுறைப்படுத்துவாரா அல்லது மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் போல அதுவும் செயலிழந்து போகுமா என்பதுதான் கேள்வி.

அரசுக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கொள்கைக் குழப்ப விடயங்களில் உறுதியான நிலைப்பாடு எடுப்பவர்போல வாய்ப்பேச்சில் காட்டிக்கொண்டு பின்னர் செயலில் அந்த எதிர்ப்புகளுக்கு அடங்கிப்போகும் ஜனாதிபதி சந்திரிகாவின் போக்கு, பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் அவ்வாறுதான் அவர் நடந்துகொள்வார் என்ற சந்தேகத்தையே எமக்கு ஏற்படுத்துகின்றன.

ஆரம்பத்தில் துள்ளிக்குதித்துவிட்டு அடங்கிப்போகும் சோடாப் புட்டி 'காஸ்' அல்ல தாம் என்பதையும் -

எடுத்த முடிவை பின்வாங்காமல் நடைமுறைப்படுத்துவதில் உருக்குப் போன்ற உறுதியுடையவர் என்பதையும் -

வெளிப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ள பொன்னான வாய்ப்பு பொதுக்கட்டமைப்பு.

அவர் சோடா புட்டி 'காஸா' அல்லது உறுதிமிக்க உருக்கா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

# நகரப்பகுதி உணவகங்கள் பலவற்றில் சுகாதாரமற்ற உணவு வகை விற்பனையில்

## உணவு தயாரிப்பும் அதோகதி என்கிறார் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர்

குருநகர்,மே21

யாழ். நகரப் பகுதியில் உள்ள அநேக உணவகங்களில் சுகாதாரமற்ற உணவு வகைகள் பரிமாறப்பட்டு வருவதுடன் திகதி காலாவதியான உணவு மற்றும் பிஸ்கட் வகைகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதேவேளை, உணவு தயாரிப்பிலும் திருப்தியான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை.

நகரப் பகுதியில் உள்ள உணவகங்களில் அண்மையில் தாம் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனை மூலம் இது கண்டறியப்பட்டதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தலைமையில் யாழ்.உணவு மருந்துப் பரிசோதகர் ஆ.மகாதேவன், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.இராசேந்திரா மற் றும் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத் திய அதிகாரி, யாழ். மாநகர சபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் அடங் கிய குழு கடந்த திங்கட்கிழமை யாழ்.நகர் மற்றும் யாழ். கண்டி வீதியில் அமைந் துள்ள உணவு நிலையங்களின் சுகாதாரம் தொடர்பாக திடீர்ப் பரிசோதனையை நடத்தியது. மேற்படி திடீர்ப் பரிசோதனை குறித்து சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

உணவகங்களில் சுகாதாரம் பேணப்படாமல் இருக்கக் காணப்பட்டதுடன், உணவுகள் திறந்து வைக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

அலுமாரிகளில் உணவுகள் வைக்கப்பட்டிருந்த போதிலும் இந்த அலுமாரிகள் பல கடைகளில் திறந்த நிலையிலுமே காணப்பட்டன. உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் நீர் சுத்தமான நிலையில் இல்லாதிருந்தது.

உணவு பரிமாறுபவர்கள் துப்புரவான ஆடைகளுடன் காணப்படவில்லை. உணவு சமைப்பதற்கு பயன்படுத்தும் சமையலறையின் சுகாதார நிலை படுமோசமாகக் காணப்பட்டது.

இத்தகைய சமையலறைகளைப் பார்வையிடும் உணவுப் பிரியர்கள் தொடர்ந்தும் இந்த உணவகங்களைப் பயன்படுத்துவார்களா என்பது கேள்விக்குறியே. மேலும், பல கடைகளில் பழுதடைந்த நிலையில் கேக் வகைகளும் திகதி காலாவதியான நிலையில் பிஸ்கட் வகைகளும் காணப்பட்டன. இவை எம்மால் கைப்பற்றப்பட்டு எடுத்து வரப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நீர்மூலம் பரவும் நோய்களான நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்றுளைவு ஆகிய நோய்கள் தற்போது வளர்ச்சி கண்டுள்ளன. இதற்கு உணவுகளில் சுத்தம் பேணப்படாமையே காரணமாகும்.

உணவகங்களின் சுகாதாரக்குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் கோரிக்கை விடுத்ததுடன், சுகாதாரம் பேணப்படாத உணவகங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தியுள்ளோம்.

இத்தகைய சட்டநடவடிக்கை எடுக்காவிட்டால் சுகாதாரம் பேணப்படாமல் போவதுடன் நீர்மூலம் பரவும் நோய்கள் மக்களைத் தாக்கக் கூடும். எனவே வெகுவிரைவில் யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய உணவு நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஏ-51)

# சைக்கிளில் வந்த பெண்ணின் சங்கிலியை அறுக்க முயற்சி

தென்மராட்சி,மே 21

சைக்கிளில் சென்ற பெண் ஒருவரின் சங் கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய திருடனைப் பொதுமக்கள் துரத்திச் சென்றனர். இதனால், திருடன் சங்கிலியை எறிந்து விட்டு ஓடித் தப்பிவிட்டான்.

மீசாலை, டச்சுவீதியில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் செயலமர்வுக்குச் சென்றுவிட்டுத் திரும்புகையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாம் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய சமயம் குறிப்பிட்ட ஆசிரியை கூக்குரலிட்டார் என்றும் -

இதனை அடுத்து பொதுமக்கள் திருடனைத்துரத்திச் சென்றனர் என்றும் - கூறப்பட்டது.

பொதுமக்கள் தன்னைத் துரத்தி வருவதை அறிந்த திருடன் சங்கிலியை வீதியில் எறிந்துவிட்டு ஓடித்தப்பிவிட்டான் என்று கூறப்பட்டது. (எ-117)

# தமிழ்ப் பேரகராதியைத் திருத்த ஈழத்தமிழர்கள் உதவ வேண்டும்

## தமிழகப் பேராசிரியர் வேண்டுகோள்

சென்னை,மே21

தமிழகத்தின் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் மொழித்துறை, தமிழ்ப்பேரகராதியின் திருத்திய பதிப்பை வெளியிட உள்ளது. இதற்கு இலங்கையில் உள்ளவர்களும் சொற்களை சேகரித்து அனுப்பி ஒத்துழைக்க வேண்டுமென சென்னைப் பல்கலைக்கழக தமிழ்மொழித் துறைத் தலைவர் கலாநிதி வ.ஜெயதேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

சொற்களை அனுப்புவோர், தமது வட்டாரத்தில் பேசப்படும் சொற்களைச் சேகரித்து அவற்றின் அர்த்தம், அவை பயன்படுத்தப்படும் விதம், இடம் ஆகிய குறிப்புகளுடன் அனுப்புமாறும்-

'கலாநிதி வ.ஜெயதேவன், தலைவர் தமிழ்மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 600005 என்ற முகவரிக்கோ, 009144 28441126,0091 44 28441686, 009144 28444933 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டோ, அல்லது Vjdevan @ rediffmail. com என்ற மின் அஞ்சல் முகவரி மூலமோ சொற்களை அனுப்பலாம் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி தமிழ்ப் பேரகராதியில் சொல், உச்சரிப்பு, இலக்கணக்குறிப்பு, சொல் மூலம், தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள், உதாரணவாக்கியம் ஆகியவை இடம்பெற உள்ளன. கடந்த மூன்றாண்டுகளாக பேரகராதியைத் திருத்தும் பணி நடைபெறுகிறது. கனடாவில் வாழும் கலாநிதி கந்தவனம், வித்துவான் ஜீவரத்தினம் போன்றோர் இலங்கையில் புழக்கத்தில் உள்ள சொற்களை வழங்கி உதவுகின்றனர்.

இவ்வாறு கலாநிதி ஜெயதேவன் மேலும் தெரிவித்தார். (ஒ)

# நவீன வசதிகளுடன் அம்புலன்ஸ் தேவை ஆஸ்பத்திரி நிர்வாகம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 21

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நவீனவசதிகளுடன்கூடிய அம்புலன்ஸ் ஒன்றினைப் பெற்றுத்தருமாறு யாழ்.அரச அதிபரிடம் வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

வைத்தியசாலையில் நான்கு அம்புலன்ஸ்கள் உள்ள போதிலும் அவற்றில் நவீன வசதிகள் எவையும் பொருத்தப்படவில்லை என்றும் -

இதனால், நோயாளிகளை கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு இடம்மாற்றுவதில் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடுவதாகவும் -

இது விடயமாக, அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, வாரத்தில் நான்கு தடவைகள் இங்கிருந்து கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு நோயாளிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவ்வாறு அழைத்துச் செல்லப்படுபவர்களில் அநேகர் அதி தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகவே கொண்டு செல்லப்படுகின்றனர்.

இவ்வாறு அழைத்துச்செல்லப்படும் நோயாளர்களுக்கு ஏற்ற வகையிலான சிகிச்சைகளை அளிக்கக் கூடிய வசதிகளை உடைய அம்புலன்ஸ் எதுவும் யாழ். ஆஸ்பத்திரியில் இல்லை.

எனவே, இது தொடர்பில் அதீத கவனம் செலுத்தி சகல வசதிகளுடன் கூடிய அம்புலன்ஸ் ஒன்றினை ஆஸ்பத்திரிக்குப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-13)

## உதயவாக்கு

செயல் சிறிதோ, பெரிதோ தம்மால் செய்யக்கூடியவற்றைச் சலிப்பின்றிச் செய்பவரே போற்றுதற்குரியவர்.

– ஓர் அறிஞர்

## நாளை

*வைகாசி 08*
*ஞாயிற்றுக்கிழமை*
*22.05.2005*
*திதி : சதுர்த்தசி*
*பின்னிரவு 03.34 வரை*
*நட்சத்திரம் : சுவாதி*
*பிற்பகல் 04.55 வரை*
*சுபநேரம் : 08.52 - 10.22*
*ராகுகாலம்: 04.22 - 05.52*
*(யாவும் பழைய நேரப்படி)*

# இசைத்தட்டு விற்பனையால் கிடைத்த நிதி ஆழிப்பேரலை பாதித்த குடும்பநலனுக்கு

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் ஒப்படைப்பு




தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளரிடம், பொறியியலாளர் சண்முகபாலன் நிதியினைக் கையளிக்கின்றார்.

யாழ்ப்பாணம்,மே21

இசைத்தட்டின் முதல் பிரதி, மற்றும் சிறப்புப் பிரதிகளின் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற நிதி ஆழிப்பேரலை பாதித்த குடும்பங்களின் நலன்கருதிய திட்டங்களுக்கென வழங்கப்பட்டது.

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வசித்து வருபவருமான பொறியியலாளர், சண்முகம் சண்முகபாலன் இயற்றி வெளியிட்ட 'சிற்பிகள் நாயகி பாமாலை பாகம் 1' இன் வெளியீட்டு விழா அண்மையில் பத்திரகாளி அம்மன் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

இந்த வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு முதல் பிரதி மற்றும் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டவர்கள், தமது அன்பளிப்புக்களை வழங்கி தமக்குரிய பிரதிகளைப் பெற்றிருந்தனர்.

இவ்வாறு சிறப்புப் பிரதிகள் விற்பனை மூலம் கிடைத்த ரூ 40 ஆயிரம் கடந்த 12 ஆம் திகதி கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மாவட்டப்பணிமனையில் வைத்து ஆழிப்பேரலையால் பாதித்தவர்களுக்கென அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பொறியியலாளர் சண்முகம் சண்முகபாலன் மேற்படி அன்பளிப்புப் பணத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜிடம் கையளித்தார்.

# ஆலய பிரதிஷ்டை ஆராதனை

எழுந்துகாட்டுவோம் -
- வாருங்கள்
நெகேமியா 2:18

அன்புடையீர்!
நாளை (22-05-2005) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிக்கு கந்தரோடை வீதி,
அளவெட்டியில் அமைக்கப்பட்ட

## எபனேசர் ஜெப ஆலயத்தை

தேவ மகிமைக்காகவும் தேவனுடைய ஆராதனைக்
காகவும் பிரதிஷ்டை செய்ய இருப்பதால்
இவ்வாராதனையில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு
சகலரையும் அன்புடன் அழைக்கிறோம்.

போதகர்கள், ஊழியர்கள்,
சபைமக்கள்,
எபனேசர் ஜெப ஆலயம்.

(45590)(46-18-16-24)



யாழ்.நகர்மைய றோட்டறக் கழகமும்
கோண்டாவில்
இளைஞர் முன்னேற்றக் கழகமும்
இணைந்து வழங்கும்

CELEBRATE ROTARY

## ஸ்ரார் 'இசைக்குழுவின்'
## 'இராஜ ராகங்கள்'

காலம்:
23-05-2005
நேரம் :
பிற்பகல் 3 மணி
இடம்:
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

திட்ட இயக்குநர். - கழகத் தலைவர்.
(C/42944)(46-18-16-24)


## அரச அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்பு

குருநகர்,மே21

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரச அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளன என பயிற்சி வகுப்புகளின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.தனரஞ்சிதராஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஐ.ஐ.எஸ். நிறுவனத்தில் காலை 9 மணிக்கும் எஸ். ரி.பி. ஆகிய நிறுவனத்தில் காலை 9.30 மணிக்கும் யாழ். அரச அதிபர் க. கணேஸும் -

கரவெட்டி எஸ்.ரி.பி.யில் காலை 9 மணிக்கும், பருத்தித்துறை எஸ்.ரி.பியில் காலை 9.30 மணிக்கும் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் -

சாவகச்சேரி எஸ்.ரி.பி. நிலையத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் காலை 9.00 மணிக்கும் - இந்தப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இதற்கிடையில் - இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் உரியவர்களுக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் தெரிவித்தார்.

இன்று சனிக்கிழமை வைபவரீதியாக ஆரம்பிக்கப்படும் இந்தப் பயிற்சி வகுப்புகள் வெசாக் விடுமுறைக்காக இடைநிறுத்தப்பட்டு வெசாக் விடுமுறையின் பின்னர் எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் உரிய நிலையங்களில் தொடர்ந்து நடைபெறும்.

கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறை (CIGAS), சம்பளப்பட்டியல் முறை (GPS) ஆகிய பயிற்சிகளைப் பயில விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகவுள்ளன என்று பயிற்சி இணைப்பாளர் தெரிவித்தார். (எ-51)

## றோட்டறக்ட் கழக பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே21

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய சமய, கலாசாரப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 'உதயன்' பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)


# UNIVERSITY OF JAFFNA, SRILANKA
# VACANCIES

Applications are invited by me up to 24th. June, 2005 from suitably qualified applicaints for the following posts:

**1. Director of Physical Education**

Salary: Rs.21,252.50 p.m. (Basic) - upto 31.12.2005
Salary Scale: Rs.24,795 - 10 x585-30,645/- p.m. (Effective from 01.01.2006,

**Qualifications:**

i. (a) A degree in Physical Education of a recognized University or equivalent or higher qualifications with at least 12 years experience in the organization and implementation of recreational programmes after obtaining such degree / qualification.

OR

(b) A graduate of a recognized University with approved postgraduate or professional qualification with at least 12 years experience in the organization and implementation of recreational programmes after obtaining such degree / qualification.

OR

(c) Instructors of Physical Education in the University service with not less than twelve (12) years' service in that grade and who have satisfactorily completed a course in Physical Education of not less than 06 months' duration after being appointed as Instructor. (A person considered under this category could be appointed on the recommendation of the council and with prior approval of the commission).

Notes: An appliacant who is eligible Under (i)(b) above will be considered only if there are no suitable applicants under (i)(a). An applicant who is eligible under (i)(c) above will be considered only if there are no suitable applicants under (i)(a) and (i)(b).

Age: Not more than 45 Years
Selection: By Interview

**2. Full Time Sub-Warden (Male/Female)**

Salary: Rs.12,550/- p.m. (Basic) - upto 31-12-2005
Salary Scale: Rs.14,070 - 10x290 - 16,970/- p.m. (Effective from 01-01-2006

**Qualifications:**

A graduate of a recognized University. Preference will be given to those with experience in Administration and Management of Hostel.

Age: Not more than 45 years
Selection: By Test and Interview
Note: The successful applicant should reside in the Hall of Residence of Balasingam Hall / Anandakumarasamy Hall / RAFA Hostel, Maruthanamadam / Siddha Medicine Hostel, Kaithady / Hostel of Faculty of Agriculture, Killinochchi. But he / she cannot reside with their family in the Hostel. The successful condidate should pay a refundable security deposit of Rs.5000/= This amount shall be deducted from their salary in 10 instalments.

**3. Record Keeper, Grade II (A-09)**

Qualifications:
i. Should have passed the G.C.E. (Ordinary Level) Examination in six subjects with five credits at more than two sittings; and
ii. One year of experience in keeping records in a Record Room in the University system or Government Department / State Corporation / Recognized Institution.
iii. Good Knowledge of computer Literacy and Binding work.

Preference will be given to those who have passed the G.C.E. (Advance Level) Examination in three subjects and obtained the certificate Issued by the Department of National Archives on completion of 05 day course conducted for record keeping.

Salary: Rs. 9,725/= p.m. (Basic) - upto 31-12-2005
Salary Scale: Rs.10,475 - 8 x 110: 2x 155: 7x185 - 12,960/= p.m. (Effective from 01-01-2006)
Selection: By Trade Test and Interview

**STATUTORY BENEFITS**

1. Membership in Universities Provident fund and Pension Scheme in the University System.
2. Gratuity payments.
3. Employment Trust Fund benefits.
4. Free medical service.


Applications should be made on the forms available in the office of the Senior Assistant Registrar / Establishments (Non-Academic) of this University on a payment of Rs.20/= for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order /Postal Order to the value of Rs.20/= in the name of the Bursor, University of Jaffna, together with a self - addressed Rs.4.50 stamped envelope of 23x10 cm, in size. Applications sent on specified forms will only be accepted.

Applicants from Government Departments / State Corporations and Statutory Bodies should apply through their appointing outhority. Age limit is not applicable to those who are in service.

Applications received after the closing date will be rejected without intimation.

Registrar.
May 19,2005. (C/42934) (24)


# மரண அறிவித்தல்



## இரத்தினம் ஏரம்பமூர்த்தி

வீரமனை, குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் பரிசயப்புலம் குப்பிளான் தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ஏரம்பமூர்த்தி 17-05-2005 செவ்வாய்க்கிழமை பகல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - பறுபதம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் வரதராசா (சுவிஸ்), விக்கினராசா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி (சுவிஸ்) , பாமினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் எழிலன் (சுவிஸ்), வினுஷன் (சுவிஸ்), அஸ்வினி (சுவிஸ்), சினேக்கா (நோர்வே), கரிசனா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-05-2005) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் குப்பிளான் காடாகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

பரிசயப்புலம்,
குப்பிளான் தெற்கு, ஏழாலை. (45655) (24-18-16)

## பொதுக்கட்டமைப்பு விவகாரம்

# பேசவருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை நிராகரித்தது ஜே.வி.பி.

கொழும்பு.மே 21

பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்துப் பேசுவதற்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்த அழைப்பையே அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.நிராகரித்துவிட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேசவருமாறு ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஜே.வி. பியினருக்கு உத்தியோகபூர்வ வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நேற்று முன்தினம் மாலை மேற்படி பேச்சு நடைபெற விருந்தது.

இந்தப் பேச்சில் கலந்துகொள்வதென ஜே. வி.பி. முன்னதாகத் தீர்மானித்திருந்தபோதும் இறுதிநேரத்தில் தனது முடிவை அது மாற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக உத்தேச பொதுக்கட்டமைப்புச் சம்பந்தமான நகல் யோசனைகளை ஜே.வி. பி. அரசிடம் கோரியதாகவும், ஆனால், அது வழங்கப்படாத காரணத்தினால் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளாதிருக்க ஜே.வி.பி. தீர்மானித்ததாகவும் அந்தக் கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்புக் குறித்துத் திட்டவட்டமாக எதுவும் தெரியாத நிலையில் - அதன் வடிவம் குறித்துக் கூட எதுவும் அறியாத நிலையில் - அந்த விடயம் தொடர்பாக அரசிடம் உள்ள திட்டத்தின் நகல் கிடைக்காத நிலையில் - அது குறித்துப் பேசச் செல்வதில் அர்த்தமில்லை என்று கட்சி கருதுவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது தொடர்பில் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் பிராசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ இப்படியான சந்திப்புக்கான அழைப்பெதுவும் தமது கட்சிக்கு கிடைக்கவில்லையென்று கூறினார். (த-க)

# ஜனாதிபதியின் கருத்துகளுக்கு பதிலளிப்பதற்கு ரூபவாஹினியில் சந்தர்ப்பம் கேட்கிறது ஜே.வி.பி.

கொழும்பு.மே21

தேசியத் தொலைக்காட்சியில் தமது கட்சியின் கருத்துக்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்மென்று கோரி ஜே.வி.பியின் தலைமைச் செயலர் ரில்வின் சில்வா இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஏற்கனவே, தேசிய தொலைக்காட்சியினூடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துரையாடலொன்றில் பங்குபற்றித் தெரிவித்த கருத்துகள் பல தவறானவையாகும்.

ஜனாதிபதி தெரிவித்த சில கருத்துக்களின்படி அவருக்கெதிராக எம்மால் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனாலும், எமது நாட்டில் ஜனாதிபதிக்கெதிராக இவ்வாறான நடவடிக்கையினை எடுக்கமுடியாது.

ஜனாதிபதிஅரசு பற்றியும் நாட்டின் அரசியல் நிலை பற்றியும் கூறிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளமுடியாது. விடுதலைப் புலிகளைப் பற்றி ஜனாதிபதி கூறிய விடயங்களைத் தமிழ்ச்செல்வனே ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, தேசிய தொலைக்காட்சியில் எமக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் நாட்டின் உண்மையான நிலையை மக்களுக்கு கூறுவோம்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-3)

# பொதுக்கட்டமைப்புக்கு இ.தொ.கா.முழு ஆதரவு!

## ஜனாதிபதியிடம் தொண்டா தெரிவிப்பு

கொழும்பு.மே21

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள் கட்டுமானப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து உருவாக்குவதற்கான ஜனாதிபதியின் முயற்சிக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியிருக்கிறார்.

சுமார் ஒரு மணிநேரம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய தொண்டா, பொதுக் கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும், உள்ளேயும் தமது கட்சி முழுமையான ஆதரவை வழங்குமென்றும் கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு முயற்சியின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி, ஆறுமுகன் தொண்டமானுக்கு விளக்கினார் எனவும் கூறப்படுகிறது. (க-3)

# வாழைச்சேனைப் பகுதியில் இளைஞர் சுட்டுக்கொலை

ஏறாவூர்.மே 21

வாழைச்சேனை பொலீஸ் பிரிவிற்குட்பட்ட பிறைந்துறைச் சேனை என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த சேகு இஸ்மாயில் ஜெஸ்மின் (வயது 24) என்பவரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார் என்று வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தேவை காரணமாக இவர் பிறைந்துறைச்சேனை பிரதான வீதியில் சென்று கொண்டிருந்தபோது சுடப்பட்டார். இவரை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

கொலைசெய்யப்பட்டவர் கடந்த காலங்களில் இராணுவத்தினருடன் நெருக்கமாகச் செயற்பட்டுவந்த தமிழ் ஆயுதக் குழுவொன்றின் முன்னாள் உறுப்பினர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனப் பொலீஸார் கூறினர்.

கொலையுண்டவரின் சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. ஜி.தர்மவர்தன தலைமையிலான பொலீஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-3)

# திருமலையில் புதன் இரவு தமிழ் இளைஞன் கைது

கொழும்பு.மே 21

திருகோணமலை, மட்கெலிய சந்தியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழ் இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதனன்று இரவு 7.55 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினர் பணியை முடித்துவிட்டு முகாமிற்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் தம்வசம் இருந்த ஏதோவொன்றைப் பயன்படுத்தி இளைஞன் ஒருவன் அவர்களைத் தாக்கினான் என்றும் - அவருடன் கூட இருந்தவரையே இராணுவம் கைதுசெய்தது என்றும் இராணுவத் தரப்புத் தெரிவித்தது.

கைது செய்யப்பட்டுள்ளவர் மகேந்திரன் கோபிநாதன் (வயது 19) என்பவராவார். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து இவர் தப்பியோடிய சமயம் இராணுவத்தினர் இவரைப் பிடித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிடிபட்ட இளைஞன் திருகோணமலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலீஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

# நீத்தார் நயப்புரை

## ஆளுமை நிறைந்த அதிபர்



குவலயத்தின் விழி போன்றான் யாழ்ப்பாணத்தான் என்று சித்தர்களினாலும் ஞானிகளினாலும் போற்றி ஏற்றப்பட்ட ஈழ மணித்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்திலே கலைவளமும் நீர் வளமும் நிலவளமும் பெருகி கற்றவர்கள் பலர் வாழும் புண்ணிய பூமியாம் கரம்பொன்னின் பெருமையினை மேலும் மேம்படுத்தத் தோன்றிய ஆன்றோர்கள் வரிசையிலேயே அமரர் கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று' என்று அறம் உரைத்த மறைப்புலவன் வள்ளுவனின் வாக்கிற்கு அமைவாக, பிறக்கின்றபோதே புகழோடு 1946 ஆம் ஆண்டு இம்மண் சிறக்க வந்துதித்தவரே அமரர் க.இரத்தினசிங்கம்.

இவர் தனது ஆரம்ப கல்வியை சிவகுருநாத வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை வேலணை வைத்திலிங்கம் துரைச்சுவாமி வித்தியாலயத்திலும் உயர் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றார்.

கல்வி கற்றதன் பின், 'அன்னசத்திரம் யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்பதற்கிணங்க தான் கற்ற கல்வி பயனுறு வகையில் அமையுமாறு ஆசிரியத் தொழிலை தனது வாழ்நாள் தொழிலாகத் தேர்ந்தெடுத்தார்.

இவர் தனது ஆசிரியப் பணியிலே 1970 ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று நயினாதீவு கணேசா மகாவித்தியாலயத்தில் தன் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். 1972 ஆம் ஆண்டு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருடகாலம் விவசாயப் பயிற்சிக் கல்வியைப் பெற்றார். பின் மாத்தறை அறபா மகாவித்தியாலயத்தில் 1974 ஆம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணியாற்றினார்.

பொதுப் பணியோடு தன் வாழ்க்கையும் சிறந்திட 1975 ஆம் ஆண்டு யோகன்னனா செறின் தர்மபாலி என்ற பெண்ணோடு இல்லறமாம் நல்லறத்தில் இணைந்துகொண்டார். இல்லறத்தின் பயனாக இவருக்கு அன்புமிக்க பிள்ளைகள் பிறந்தனர். 'பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்' என்ற முதுமொழிக்கிணங்க இவர் தனது மாணவர்கள் அனைவரையும் தன் பிள்ளைகளாகவே கருதி அன்பாகக் கல்வி புகட்டியதால் இவரது மக்கள் இவர் கண்முன்னே கல்வியில் சிறந்து விளங்கினர்.

'தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்று இலக்கணம் படைத்த வள்ளுவரின் மாண்புறு கூற்றுக்கு அமைய அமரர் க.இரத்தினசிங்கம் விளங்கினார் என்றால் மிகையாகாது.

தனது ஆசிரியப் பணியை 1977 ஆம் ஆண்டு கொறகொட முஸ்லிம் வித்தியாலயத்திலும் 1977 ஆம் ஆண்டு வெலிகம அறபா வித்தியாலயத்திலும் 1980 ஆம் ஆண்டு நாரந்தனை றோ.க. வித்தியாலயம், கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம் ஆகியவற்றிலும் 1989 ஆம் ஆண்டு தம்பாட்டி அ.த.க.வித்தியாலயத்திற்கு அதிபராகவும் 1994 ஆம் ஆண்டு இடமாற்றலாகி யாழ்.புனித அந்தோனியார் கல்லூரியில் அதிபராகவும் 2001 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறைக் கோட்ட கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 10.05.2004 இல் ஓய்வுபெற்றுக்கொண்டார்.

– கடோற்கஜன்.

## தனக்கென வாழாத பிறர்க்குரியாளன்



இப்பரந்த நிலவுலகின் கண்ணே புனிதப் பிறவியான இந்த மனிதப்பிறவி எடுத்தவர் களில் பல பேதங்களுண்டு. மனிதரில் தெய்வம், மனிதரில் மனிதம், மனிதரில் மிருகம் என்றுள்ள பல்வேறு விதங்களில் மனி தரில் மனிதராக வாழ்பவர் ஒரு சிலரே.

இந்த மனிதரில் மனிதராக வாழ்ந்தவர்களில் கார்த்திகேசு சிவசுப்பிரமணியமும் ஒருவர். இவர் மாந்தருள் திலகமாய் மாண்புடன் வாழ்ந்து மறைந்த ஒரு மனிதனாவார். தன்னுடைய தேவைகளையெல்லாம் தியாகஞ் செய்துவிட்டு மற்ற வர் நலனுக்காகவே தனது நேரத்தைச் செலவிட்ட ஒரு புண் ணிய புருஷர் இவர்.

பிறர் மனம் நோகாதபடி இன்சொல் மட்டுமே பேசி வாழ்ந்தவர் இவர் என்று கூறினால் மிகையாகாது. எந்தநேரமும் சிரித்தமுகம், லட்சுமிகரமாகத் தோற்றமளிக்கும் இவர் சாதா ரண உடை உடுத்தி சைக்கிளிலேயே போய்வருவார். எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்.

உதவிகேட்டு வந்தவர்களுக்குத் தன்னாலான மட்டும் உதவுவார். கணக்காய்வாளரான இவர் பொது நிறுவனங்கள், ஆயைங்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்குச்சென்று கணக்குகளைச் சீர்செய்து நல்ல முறையில் இயங்க ஆலோசனைகள் வழங்குவார். இவருடைய ஆலோசனைகள் அனைத்தும் செயலுருவம் பெறும்போது பாராட்டும் பெருமதிப்பும் இவருக்குக் கிடைப்பது வழக்கமாகியிருந்தது. சிறந்த சமய, சமூக தொண்டராக சாந்தமே உருவான இவர் கோபம் என்பதையே அறியாதவர். சினம் என்றால் என்ன என்பதையே அறியாத தரும தேவதை போன்று நம்மிடையே வளைய வந்தவர் இன்று இல்லையே என்பதை எண்ணும் போது துக்கம் தொண்டையை அடைக்கின்றது.

யாழ்.வைமன் வீதியில் வசித்து வந்த இவர் ஓர் அம்பாள் பக்தர். ஆன்மீக நாட்டமுள்ள இவர் சைவநெறி பிறழாமல் வாழ்ந்து வந்தவர். இவருடைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நடப்பதே இவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

– சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்.



சைவபரிபாலன சபையின் தலைவராகவும் பரீட்சைச் செயலாளராகவும் பணியாற்றிய சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமிக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் சமீபத்தில் நடத்தப்பெற்ற பாராட்டு வைபவத்தின் போது மாநகர ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமாகிய கலாநிதி க.குணராசா கேடயம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (8)



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் பகுதித் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற திருமதி ப.கதிரவேலுவிற்கு சிரேஷ்ட ஆசிரியை திருமதி இ.சிவலிங்கம் பொற்பதக்கம் சூட்டிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினர் சி.கதிரவேலு, வித்தியாலய அதிபர், முன்னாள் ஆசிரியை செல்வி ப.சரவணமுத்து ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(எ-203)

# நியமனம்பெற்ற ஆயுர்வேத டாக்டர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை

ஊர்காவற்றுறை,மே21

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் செயற்படுத்தப்பட்டுவரும் இலவச ஆயுர்வேத வைத்தியநிலையங்களில் வெற்றிடமாகவிருந்த ஆயுர்வேத வைத்தியர் வெற்றிடங்கள அண்மையில் நிரப்பப்பட்ட போதும், இதுவரை அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்த வேதனம் எதுவும் வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - இவர்களுக்கு குறித்த உள்ளூராட்சி மன்றங்களில் கடமையைப் பொறுப் பேற்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதும், முறைப்படியான நியமனக் கடிதங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

இதனாலேயே, கடந்த நான்கு மாதங்களாக இவர்களுக்கான சம்பளம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்பட வில்லை எனக் கூறப்படுகிறது. (எ-16)

# பயணிகள் சேவைக்கான படகினை புனரமைக்க நிதி வழங்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை,மே21

அனலைதீவு பல நோ.கூ.சங்கத்திற்கு அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட படகினைத் திருத்தி பயணிகள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரச, மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து மேற்படி சங்கம் நிதியுதவியினைக் கோரியுள்ளது.

இந்திய மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளில் ஒன்று யாழ்.அரச அதிபரினால் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் இருந்து மேற்படி சங்கத்திற்கு அண்மையில் பெற்றுக்கொடுக் கப்பட்டிருந்தது.


இப்படகினை தீவுப்பகுதிகளுக்கிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தக்கூடியவாறு திருத்தி அமைப்பதற்கு பல லட்சம் ரூபா தேவைப் படுவதாகவும்-

தமது சங்கத்திடம் இவ்வாறு படகினைத் திருத்தியமைக்க கூடியவகையில் நிதி வசதி யின்மையால் அரச மற்றும் அரச சார் பற்ற நிறவனங்களிடம் இருந்து நிதி உதவியினை எதிர்பார்ப்பதாகவும் - மேற்படி சங்கத்தின் உபதலைவர் சி.கனகு தெரிவித்தார்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக மேற்படி படகு கையளிக்கப்பட்ட நாள் முதல் அனலைதீவு இறங்குதுறையில் எதுவித பயனுமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் -மேற்கொண்டு நிதியுதவி கிடைக்கும் பட்சத்திலேயே இப்படகினைத் திருத்தி தீவுப் பகுதிகளுக்கிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்றும் - அவர் தெரிவித் தார். (எ-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 14 - 09 - 1941



உதிர்வு 21 - 04 - 2005

### அமரர் தாமன் சதாசிவம்

மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21-05-2005) சனிக்கிழமை காலை 7 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அண்ணா சிலையடி,
கரணவாய். (45578)(46-15-34)

- குடும்பத்தினர்.

## ஆவது 2 பிறந்ததின வாழ்த்து




உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாற்றில் வசித்துவரும்
**பத்மநிதி - தமிழ்பிரியா தம்பதிகளின்**
செல்வப் புதல்வன்

செல்வன் **கிருஷாந்த்**

தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (21-05-2005) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண் டாடுகின்றார். செல்வன் கிருஷாந்தை அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், மாமிமார், சித்தப்பா, சித்தி மார், கனடாவில் இருக்கும் தவராசா குடும்பத்தினர், சுவிஸில் இருக்கும் சிவஞானம் குடும்பத்தினர், ஜேர்மனியில் இருக்கும் சிவலிங்கம் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சந்நிதி முருகன் அருள்வேண்டி சகல கலைகளையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் நலத்துடன் வாழவேண்டுமென மனமார வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அப்பப்பா: **மா.தம்பித்துரை**
தொ.பே:0602 213052.

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

(45372)(50-34-15)

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை: அலுவலக உதவியாளர் தரம் - 04 (சிற்றூழியர் தரம் - 04/Peon Grade - 04)

தகைமைகள்: i. க.பொ.த.(சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/கணிதம் II, தமிழ் உட்பட 04 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
ii. ஆண்பாலார் மட்டும்.

மாதாந்த ஊதியம்: $\frac{1,870 - 2,870}{50x20}$ + 6,000

அகவை எல்லை: 18 - 25 வருடங்கள்

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் *யாழ்.சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சியில* அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு, 30.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

**மனிதவள மேலாளர்,**
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-42831)(26-15-34-46)

## தீங்காத நினைவுகளுடன் ஓராண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 29.05.1928



ஆண்டவன் அடியில் 21.05.2004

### அமரர் இராசையா குமாரசாமி (பொன்னுத்துரை)

(முன்னாள் உரிமையாளர், இராசையா அன் சன்ஸ் யாழ்ப்பாணம்)

வாழ்வில் வழிகாட்டி ஒளியூட்டி
வாழவைத்த எங்கள்அன்புத் தெய்வமே!
ஓராண்டு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம்முடன் கலந்திருக்கும்
உங்கள் புன்னகைபூத்த திருவதனம்
என்றும் எம்நெஞ்சில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
என்றும் எங்கள் பிரார்த்தனைகள்
இறைவனுடன் கலந்து இருக்கும்.

புகையிரத நிலைய வீதி,
சுண்டுக்குளி, கச்சேரி.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

(45621) (54-11-15)

# சிவராம்படுகொலை தனிமனிதக் கொலையன்று கருத்துச் சுதந்திரத்தில் கைவைக்கும் செயல்

## யாழ்.ஊடகவியலாளர், படைப்பாளிகள் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம்,மே21

சுதந்திர சிந்தனையாளனும் சுதந்திர ஊடகவியலாளனுமான சிவராம் இவ்வாறு பழிவாங்கப்பட்டிருப்பது வெறும் தனிமனிதக் கொலையன்று. சுதந்திரங்கள் யாவற்றுக்குமே அடிப்படையான கருத்துச் சுதந்திரத்தில் கைவைக்கும் செயலானது, ஜனநாயகத்தின் ஆணிவேரை ஆட்டங்காண வைப்பதுடன், அராஜகம் நோக்கியும் இட்டுச் செல்கின்றது.

- இவ்வாறு யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களும், கலை இலக்கியவாதிகளும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களும், கலை இலக்கியப்படைப்பாளிகளும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சிவராமின் அஞ்சலிக் கூட்டத்திலேயே இந்த இந்த அறிக்கை விடுக்கப்பட்டது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலக ஊடகவியலாளர் தினம் கொண்டாடப்படுவதற்கு இருதினங்கள் முன்பாக, உலகறிந்த ஊடகவியலாளர் தருமரத்தினம் சிவராம் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சுதந்திர ஜனநாயக சோசலிசக் குடியரசு என்று தன்னை அழைத்துக்கொள்ளும் இலங்கையில், சிவராமின் படுகொலைதான் இந்த வகையில் முதலாவதன்று, கருத்து, சிந்தனை, அறிவு இவற்றின் மீதான தொடர்ந்த திட்டமிட்ட வக்கிர அழிப்புக்களில் ஆகப்பிந்தியதே அது. 1981 ஆம் ஆண்டில் யாழ்.பொதுநூலகமும், ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் ஸ்ரீலங்காப் படைகளால் எரியூட்டப்பட்டமை, 1987 ஆம் ஆண்டில் ஈழமுரசு மற்றும் முரசொலி பத்திரிகை நிறுவனங்கள் இந்தியப் படைகளால் குண்டுவைத்து அழிக்கப்பட்டமை என்று தொடங்கி 1990 ஆம் ஆண்டில் ரிச்சாட் டி சொய்ஸா, 19.10.2000 ஆம் ஆண்டில் நிமலராஜன் 06.01.2000 ஆம் ஆண்டில் குமார் பொன்னம் பலம் 31.05.2004 ஆம் ஆண்டில் நடேசன் என்று தொடர்ந்து கேள்விமுறையின்றி நீள்கிற கொடூரத்தின் இதுவரையிலான கடைசி இலக்கே சிவராம். லசந்த விக்கிரமதுங்காவின் முறைப்பாடு தொடர்ந்து கவனத்தை ஈர்ப்பதாகவுள்ளது. பேனாவைத் துப்பாக்கியால் எதிர்கொள்ளும் அராஜகம் இங்கு புதன்று என்பதையே இது காட்டுகிறது. இதற்கு முடிவு எப்போது?

சரியான தரவுகளையும் தகவல்களையும் உலகின் முன்வைக்கும் ஓர் ஊடகவியலாளன் பழி வாங்கப்படுகிறான் என்பது, அவன் தொழில்தர்மத்தில் குறுக்கிடுவதோடு, அவன் தொழில் சுதந்திரத்தைப் பறிப்பது என்றும் ஆகிறது. எனவே, இது அடிப்படை மனித உரிமை மீறலின் கொலைப்பரிமாணத்தை மேலும் அகலிக்கின்றது. இன்னொரு விதத்தில் சரியான தகவல்கள் - தரவுகளை அறிந்து கொள்ளும் உரிமையும் உலகோர்க்கு இதன் மூலம் மறுக்கப்படுகின்றது. ஊடகவியலாளனின் பணியிலும் பார்க்க அந்தப் பணியை அவன் செவ்வனே நிறைவேற்றுவதற்காக அவனுக்களிக்கப்படவேண்டிய பாதுகாப்பு பன்மடங்கு முக்கியமானது.

### வரலாற்றுத்துரோகம்

இலங்கையில் தற்போது நிலவும் சூழலில் மிக முக்கியமான - நெருக்கடியும், பாரிய பொறுப்பும் நிறைந்த நிலையில், எதிர்காலம் பற்றிய தீர்க்கமான, நியாயமான , புத்திசாதுரியமான முடிவினை சிறிலங்கா மக்கள் மட்டுமன்றி சிறிலங்காவின் கொள்கை வகுப்பாளர்கள், ஆட்சியாளர்களும்கூட எடுக்கவேண்டிய இந்தத் தருணத்தில் அவர்களெல்லோருக்குமே உண்மை அறியும் வாய்ப்புகள் மறுதலிக்கப்படும் முனைப்பாகவே இந்தக் கொலை கருதப்படவேண்டும். இந்தத் தகவலறியும் சுதந்திரம் அபகரிக்கப்படுவதானது இலங்கைத் தீவின் வரலாற்றுத் துரோகமாகவும் அமைகிறது.

அதுமட்டுமன்றி இந்தச் செயலானது, மீதி உலகுக்கும் ஒரு மிகத்தவறான முன்னுதாரணமாகவும் மக்களையும் அவர்தம் உரிமைகளையும் அடக்கியொடுக்கும் அராஜகவாதிகளுக்குத் தூண்டுகோலாகவும் அமையும் ஆபத்து சாத்தியம் நிறைந்தது.

எனவே, பத்திரிகையாளர்களினதும், மக்களினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் ஆட்சியாளர்களினதும் ஆரோக்கியமான, இயல்பான, பாதுகாப்பான எதிர்கால முன்னகர்வு நோக்கிய செயற்பாடுகள் செம்மையுற நடைபெறுவதற்கு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு எல்லா விதங்களிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது.

இலங்கையைப் பொறுத்தளவில் இந்தக் கொலைவரிசைகளில் இதுவரை எந்தக் கொலையிலாவது குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சரித்திரமே இல்லை.விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டதற்கு மேலாக விசாரணைகள் முன்நகர்ந்தது கிடையாது.

சிவராமின் கொலையைப் பொறுத்தளவில் அவர், தலைநகரின் மிக முக்கிய பதியொன்றில் பிரதான காவல் நிலையமொன்றின் கண்ணெதிரே கடத்தப்பட்டது மட்டுமன்றி, இரண்டு மணி நேரத்துக்குள் படுகொலை செய்யப்பட்டு அவரது உடல் பாராளுமன்றின் அயலிலே அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது என்பது எமது கவனத்தைக் கோரும் ஒன்றாகும்.

இலங்கைத் தீவில் பேனாவைத் தூக்கி, பேரினவாத விஷத்தைத் தெளித்தவர்கள் தலை நரைத்து முதுமையாகி இயற்கை மரணம் அடைகிறார்கள். ஆனால் தமிழ்த்தேசிய வாதம் பற்றிய எழுதியவர்கள். மிக இளம் வயதிலேயே படுகொலை செய்யப்பட்டுகிறார்கள். இது எத்திசை நோக்கி துப்பாக்கி தனது துரோகத்தனத்தைக் காட்டுகின்றது என்பதை நன்றாக பிரதிபிம்பப்படுத்துகின்றது.

எனவே, மெய்யான குற்றவாளிகள், சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு முற்குறிப்பிட்ட மாதிரியான, பெயரளவிலான, விசாரணைக்குழுக்கள் உதவப்போவதில்லை என நாம் திடமாக நம்புகின்றோம். விரைவில் சுதந்திர சர்வதேச விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பதை எமது முக்கிய கோரிக்கையாக விடுகின்றோம். அது மிக விரைவில் அமைக்கப்படும் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (எ)

# தெல்லிப்பழை கல்விக் கோட்டதமிழ்த்தின போட்டிகளில் 4 பாடசாலைகள் முன்னணியில்

வலி.தெற்கு,மே21

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் கடந்தவாரம் நடைபெற்ற தமிழ்த்தின போட்டிகளில் மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், அருணோதயக் கல்லூரி என்பன அதிகப்படியான முதலிடங்களைப் பெற்று வலயமட்ட போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன.

தெல்லிப்பழை கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.கயிலைநாதன் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

தமிழ்த்தின போட்டிகளில் மகாஜனாக்கல்லூரி 11 முதல் இடங்களையும், 9இரண்டாம் இடங்களையும் 3 மூன்றாம் இடங்களையும் பெற்று முதல்நிலை பெற்றுள்ளது.

யூனியன் கல்லூரி 10 முதலிடங்களையும் 7 இரண்டாம் இடங்களையும் 5 மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டது.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி 7 முதல் இடங்களையும், 5மூன்றாம் இடங்களையும் வசாவிளான ம.ம.வி.6முதல் இடங்களையும் 5 இரண்டாம் இடங்களையும் 3மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளது.

அதேசமயம் மல்லாகம் மகாவித்தியாலயம், மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்பன தலா 3முதல் இடங்களையும்-

மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி., இளவாலை மெய்கண்டான் ம.வி., கட்டுவன்புலம் ம.வி., மயிலிட்டி றோ.க. என்பன தலா ஒரு முதலிடத்தையும் பெற்றுக்கொண்டன.

தமிழ்தினப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் வலயமட்ட போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். (எ-152)

# கந்தரோடையில் இன்று ஒலிநாடா வெளியீட்டு விழா

வலிகாமம்தெற்கு,மே21

'அருளானந்தம்' ஒலிநாடா வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு கநதரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சிவஸ்ரீ.தா.ம. தாணுநாதக்குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, வலி.தெற்கு பிரதேச செயலர் சி.திருவாகரன், அதிபர் க.சிவாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

ஒலிநாடா வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற அதிபர் சி.சிவசரவணபவன் (சிற்பி), ஆய்வுரையை சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர்.

லண்டனில் வாழும் கந்தரோடை செ.மகேந்திரரா ாவால் ஆக்கப்பட்டுள்ள ஒலி நாடாவுக்கு கந்தராஜ் மூலம் இசை அமைக்கப்பட்டு எஸ்.பி.பாலசுப்பிரமணியம் , சீர்காழி சிவசிதம்பரம், ஸ்வர்ணலதா, கிருஷ்ணராஜ். மருது, மிதுலா ஆகியோரால் பாடப்பட்டு வெளியிடப்படுகிறது. (எ-152)

# அனலைதீவு கடற்படை முகாம் தற்காலிகமானது பயிற்சிக்காகவே அது நிறுவப்பட்டதாம்!

## படைத்தரப்பிலிருந்து இப்படித் தகவல்

ஊர்காவற்றுறை,மே20

அனலைதீவு மடத்துவெளிப் பகுதியில் கடற்படையினர் அமைத்த மாதிரி முகாம் பயிற்சி நடவடிக்கையின் நிமித்தமே அமைக்கப்பட்டதாகவும் - தற்சமயம் கடற்படையினர் அவ்விடத்தில் இருந்து வெளியேறியுள்ளனர் என்றும் - அனலைதீவு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.பரத்துவாசர் தெரிவித்தார்

எனவே, இப்பகுதி மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் - அவர் கூறினார்.

அனலைதீவு மடத்து வெளிப் பகுதியில் கடற்படையினர் முகாம் அமைத்து வருவதாக பொதுமக்களிற் பலர் தமக்குத் தெரியப்படுத்தியதாகவும் -

இதனையடுத்து கடற்படையினரோடு தாம் உரையாடியதிலிருந்து இது ஒரு வெறும் பயிற்சி நடவடிக்கை மட்டுமே என அவர்கள் தெரிவித்ததாகவும் - பரத்துவாசர் தெரிவித்தார்.

தற்சமயம் கடற்படையினர் பயிற்சியை முடித்து அங்கிருந்து வெளியேறிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-16)

# வாகனங்களின் இரைச்சலினால் கல்விக்கு இடையூறு என முறைப்பாடு

குருநகர்,மே21

குருநகர் பகுதிக்கு இரவு நேரங்களில் படையெடுத்து வரும் ஒலிபெருக்கிகள் பூட்டப்பட்ட ஐஸ்பழம் விற்பனை செய்யும் வாகனங்களால் இப்பகுதி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்து வருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஐஸ்பழம் விற்பனை செய்யும் வாகனங்கள் இரவு 6 மணி தொடக்கம் இரவு 9மணி வரை ஒன்றன்பின் ஒன்றாக குருநகரில் உள்ள பல வீதிகளிலும் சுற்றிச் சுற்றி வந்து ஐஸ் பழ வியபாரத்தை நடத்திவருகின்றன.

இந்த வாகனங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நேரங்களில் தமது ஒலிபெருக்கிச் சாதனங்களில் சினிமாப் பாடலகளை உச சத் தொனியில் ஒலிபரப்புச் செய்கின்றன எனறும் அத்துடன் ஒரு சில நிறுவனங்களில் வாகனங்களில் இருந்து எழும் இரைச்சல் புகை போக்கியில் இருந்து வெளிவரும் புகை என்பவற்றினால் வீடுகளில் துர்நாற்றம் வீசுவதுடன் இருமல் நோயையும் பரப்புவதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குருநகர் பகுதியில் உள்ள பல பொது நிறுவனங்கள் மற்றும் சனசமூக நிலையங்களில் இந்த நேரங்களில் மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்களும் நடைபெற்று வருவதனால் வாகனங்களில் இருந்து எழும் சத்தம் காரணமாக இம்மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றது எனவும்-

ஒலி பெருக்கிச் சாதனங்களைப் பாவிக்காமல் இவர்கள் ஐஸ்பழ வியாபாரத்தை மேற்கொண்டால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என்றும் - கூறப்பட்டது. (எ-51)



சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இலவச கணனிப் பயிற்சி நிலையம் கடந்த ஞாயிறு காலை 10.30 மணிக்கு தென்மராட்சியில் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வர்த்தகர் க.சற்குணராசா மங்கள விளக்கினை ஏற்றுவதையும் கணனிப் பயிற்சி நிலைய பெயர்ப் பலகையை தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் திரைநீக்கம் செய்வதனையும், கணனி பயிற்சி நிலையத்தை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பேராசிரியர் கே.கந்தசாமி நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்).

உ

தேவி அம்மன் துணை

## தொண்டைமானாறு - கெருடாவில் பதி
## ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய
## தேர்த் திருவிழா

*அம்பாள் அடியார்களே!*

22-05-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருங்காட்சி இடம்பெறும். அம்பிகை அடியார்கள் அனைவரும் தேர்த்திருவிழாவில் பங்குபற்றி அம்மனைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதம குரு:
கிரியாகலாபமணி
சிவஸ்ரீ க.நாகேஸ்வரக் குருக்கள்
எழுதுமட்டுவாழ், சிவலிங்கப் புளியடி,
பொ.செல்வராசா - அம்பாள் அடியவர்.

கெருடாவில்,
தொண்டைமானாறு.
(42921)(26-14-15)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில்
எழுதுவினைஞராகக் கடமையாற்றும்
**திரு.த.இராசரத்தினம்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி தம்பிப்பிள்ளை இராசம்மா**

அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் நாமும் அத்துயரில் பகிர்ந்து கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நலன்புரிச் சங்கம்,
நல்லூர்.

**பிரதேச செயலாளரும்**
**அனைத்து அலுவலர்களும்.**

(சி-42945)(26-14-15)


## UNIT

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
**Compaq PIII TOWER MODEL** கணனிகள்
விற்பனைக்குண்டு

**FREE**
ஒவ்வொரு கணனியுடனும்
Screen Filter, Dust Cover,
Mouse Pad & CD Cleaner

P4 கணனிகளுக்கு
ஈடு கொடுக்கக்கூடிய
வேகத்துடன்

இவை ஒரு வருட முழு
உத்தரவாதத்துடன்
கூடியவை

தாயக வெப்பத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட கணனிகள்
**ORIGINAL COMPLETE COMPAQ PRODUCT**

*Compaq PIII 10 GB Hard Disk, Mouse, Monitor, 128 MB SDRam, CD Rom, Floppy Drive, Keyboard*

**Latest PIV** கணனிகள் (3 வருட முழு உத்தரவாதம்) மற்றும் உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

Possible which impossible

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737 / 0776093477



## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை வீதி, அரசடி லேனில் நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: து.தர்மானந்தசிவம்
மே/பா.நா.கனகராசா,
பொன்னையா லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தெ.பேசி: 077 6156029, 077 6261412
(45359)



**வாடிக்கையாளர்களே...**

பாஸ்போட், அடையாள அட்டைப் படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்துப் பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

## மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்

62/16, ஸ்ரான்லி வீதி,
(பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.)
யாழ்ப்பாணம்.
0714168475

யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com

(C-42566) (54-15)


## தீவக வலயத்தின் தமிழ்த்தினப் போட்டி ஞாயிறே ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே21

தீவக வலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த வலய மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த போட்டிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறும் என்று தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (3-203)

## தமிழகம் செல்லமுயன்ற 7பேர் கச்சதீவில் கைது!

கொழும்பு,மே21

கடல் வழியாகச் சட்ட விரோதமாக தமிழ்நாடு செல்லக் காத்திருந்த 7 இலங்கையர்களை கடற படையினர் கச்சதீவில் கைதுசெய்துள்ளனர். பின்னர் அவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர். இச்சம்பவம் கடந்த புதன் இரவு இடம் பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்ட ஏழு பேரும் தமிழர்களாவர். அவர்களில் நால்வர் ஆண்கள்; மூவர் பெண்கள்.

நேற்றுமுன்தினம் அவர்கள் மன்னார் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் என்.எம்.அப்துல்லா உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமிழ்நாடு புனர்வாழ்வு முகாம்களிலேயே வாழ்கை நடத்திவந்தவர்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் தமது உறவினர்களைப் பார்க்க இலங்கை வந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## முதலாம் வருட நீங்காத நினைவலைகள்



மலர்வு 28 - 06 - 1932
உதிர்வு 01 - 06 - 2004

**அமரர் கந்தையா இரத்தினம்**

(ஓய்வுபெற்ற புகையிரதப் பொறியியலாளர், காங்கேசன்துறை)
திதி: 21-05-2005 (திரியோதசி)

எங்கள் அன்புத் தந்தையே!
எங்களை ஆளாக்கிவிட்டு
மறைந்தீர்களே ஆண்டொன்று
முடிந்ததே எட்டிய திசையெங்கும்
தேடியும் நிற்க மறந்திருக்கும்
நினைவுகளுடன் நிற்கின்றோம் - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மகாமாரியைப் பிரார்த்திக்கின்றோம்.

வரியப்புலம்,
சுன்னாகம்.
(45446)(26-14-15)

**பாசமுள்ள குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 17 - 08 - 1935
உதிர்வு 22 - 04 - 2005

**அமரர் ஆறுமுகம் மாணிக்கம்**

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
அனைவரையும் கவர்ந்து இவ்வுலகில்
மனிதரில் மாணிக்கமாய்த் திகழ்ந்து
பாரினில் பண்புடன் வாழ்ந்த தெய்வமே!
நீங்கள் மறைந்து மாதமொன்று சென்றாலும்
ஆண்டுகள் பல கழிந்தாலும்
உங்கள் நினைவு மட்டும் எம் நெஞ்சைவிட்டு என்றும்
நீங்கவே நீங்காது!

நீர்வேலி, சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வதிவிடமாகவும் இறுதிக்காலத்தில் ஹொலண்டில் வாழ்ந்து அமரரான மாணிக்கம் அவர்களது மரணச் செய்தியறிந்து எமது இல்லத்திற்கு வந்து அனுதாபங்களைப் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (22-05-2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 31ஆம் நாள் வைபவத்திலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(45586)(26-14-15)

**சா.வேலுப்பிள்ளை** (சகோதரர்),
**க.இராசா** (மைத்துனர்) **குடும்பத்தினர்.**

## "நிகழ்வுகளின் நிஜங்கள்" இடம்பெயர்வு' - 95

1995 இடம்பெயர்வின் பத்தாவது நினைவு ஆண்டு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக வெளியிடவுள்ள நூலுக்குப் பொருத்தமான ஆக்கங்களினை உலகத் தமிழர் பெண்கள் அமைப்பு படைப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை:

- எந்த வயதினரும் எந்த வகையான, எத்தனை ஆக்கத்தினையும் அனுப்பி வைக்கலாம். எனினும், நிகழ்வின் உண்மைத் தன்மையினைப் பிரதிபலிப்பதாகவும் அனுபவங்களினைப் பகிர்வனவாகவும் அமைந்து காணப்படுதல் கட்டாயமானது.
- இடம்பெயர்வின் காரணமாக ஏற்பட்ட வாழ்வியல் மாற்றங்கள், மறக்கமுடியாத துன்பவியல் நிகழ்வுகள், இழப்புக்கள் ஆக்கத்தில் உள்வாங்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- சம்பவ காலத்தின்போது இன்னல்களினை அனுபவிக்காத போதும் இடம்பெயர்வு தங்கள் வாழ்வில் மேற்படி மாற்றங்களினை ஏற்படுத்தியிருப்பின் தங்களினது ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.
- படைப்பாளர்கள் ஆக்கங்களினூடாகப் பிறரை அல்லது ஏனைய அமைப்புக்களினை விமர்சிப்பதற்குப் பதிலாகப் பரிந்துரைக்கப்படும் விடயங்கள் குறித்ததாக ஆக்கங்கள் அமைந்து காணப்படுதல் வரவேற்கப்படுகின்றது.
- தமிழில் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இது கட்டாயமானதல்ல.
- அனுப்பப்பட்ட ஆக்கங்கள் மீள அனுப்பப்படமாட்டா.
- தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது. ஆக்கங்கள் குறித்து எந்தவொரு கடித அல்லது தொலைபேசித் தொடர்புகளும் மேற்கொள்ளப்படலாகாது.
- தெரிவுசெய்யப்படும் ஆக்கங்களுக்குப் பெறுமதியான விசேட பரிசில்கள் வழங்கப்படும். இவை குறித்துப் படைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஆக்கங்களினை அனுப்பும்போது சரிபார்க்க வேண்டியவை:

- தெளிவான கையெழுத்தில்/கணனியில் தட்டச்சு செய்திருத்தல்.
- சுருக்கமானதாகத் தங்களின் சுயவிவரம்.
  (சம்பவ காலத்தில் தற்போது என்றிருத்தல் விரும்பத்தக்கது)
- பிரசுரம் செய்கையில் மாற்றம் செய்யப்பட வேண்டிய விவரங்கள் (ஏதுமிருப்பின்).
- ஆக்கம் தங்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.
- ஆக்கங்கள் 22-06-2005 (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு முன்பதாக அனுப்பப்பட்டிருத்தல்.
- "இடம்பெயர்வு' 95- நிகழ்வுகளின் நிஜங்கள்" என கவரின் மேல் குறிப்பிட்டிருத்தல்.

**ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:**

**The Editor,**
**EXODUS - 2005,**
**Lanka Book Depot,**
**F.L.1.14, Dias Place, Colombo - 12.**

(சி-42918)(26-14-15)


"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே. என்னை நோக்கிப் பாருங்கள்
அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். நானே தேவன். வேறொருவரும் இல்லை"
(ஏசாயா 45:22)

## இன்னிசை நற்செய்திப் பெருவிழா

- பாவத்தின் அடிமைத்தனமா?
- வாழ்க்கையில் சாபமா?
- பிசாசின் தொல்லையா?
- குடும்பத்தில் பிரச்சினையா?
- நோய்களால் அவதியா?



செய்தியாளர்

## இயேசு விடுதலை தருகிறார்

**காலம்:**
2005
மே 20, 21, 22
(வெள்ளி, சனி,
ஞாயிறு)

**நேரம்:**
தினமும்
மாலை
3.30 மணி

**இடம்:**
இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(ASSEMBLY OF GOD CHURCH, JAFFNA)

அனுமதி இலவசம்

**பாஸ்டர் எஸ்.ஜோசப் பாலச்சந்திரன்**
மற்றும் குடும்பத்தினர்
(நல்ல சமாரியன் ஐக்கியம், மதுரை, தென்னிந்தியா)

தொடர்பு: பாஸ்டர் ஜெயசீலன் ☎ 021 222 5285 077 6679339

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(45589)(42-14-15-26)



தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் விருந்தினர்கள், உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனனால் 'பாண்ட்' வாத்தியம் சகிதம் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவதையும் - யாழ். மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். கண்ணனுக்கு விளையாட்டு வீரர்கள் அறிமுகஞ்செய்து வைக்கப்படுவதையும் - மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.றொகான் இராசசிங்கம் வெற்றிபெற்ற மாணவிகளுக்குச் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (எ)

# மாகாணமட்டப் பெருவிளையாட்டுக்களில் 3 போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

வலி.வடக்கு,மே21

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் மூன்று பெருவிளையாட்டுகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பிரதேச செயலக மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் பிரதேச, மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு, இறுதி மாகாண மட்டப் போட்டிகள் திருகோணமலையில் நடத்தப்படுவது வழக்கம்.

முதல் தடவையாக இம்முறை உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், ஹொக்கி ஆகிய பெருவிளையாட்டுக்களை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டிகள் யாழ்.பொது விளையாட்டு மைதானத்திலும் - கரபந்தாட்டப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்திலும் - ஹொக்கி யாழ்.பல்கலைக்கழக மைதானத்திலும் - நடத்தப்படவிருக்கின்றன. (3-86)

## கபடிப்போட்டி

யாழ்ப்பாணம்,மே.21

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் நடத்தப்பட்டுவரும் போட்டிகளில் ஆண் - பெண்களுக்கான கபடிப்போட்டியில் நெடுந்தீவுக்கான போட்டி எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் நெடுந்தீவில் பி.ப. 2மணியளவில் நடைபெறவுள்ளது. (3-190)

# கால்பந்தாட்டத்தைப் போல கிரிக்கெட்டிலும் மாற்று வீரர்

## ஐ.சி.சி. கூட்டத்தில் ஆலோசனை

கால்பந்து பாணியில் கிரிக்கெட்டிலும் மாற்று வீர்முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன்படி, ஆட்டத்தின் எந்தக் கட்டத்திலும் ஒரு வீரருக்குப் பதிலாக மற்றொரு வீர் களமிறங்கி விளையாடலாம்.

ஐ.சி.சி.கிரிக்கெட் குழுவின் இரண்டு நாள் கூட்டம் டுபாயில் நடந்தது. கவாஸ்கர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் 12 நாடுகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதில் ஒருநாள் கிரிக்கெட்டில் பல்வேறு புதுமைகளைப் புகுதத முடிவுசெய்யப்பட்டது. இக்கூட்டத்திலேயே மேற்படி யோசனை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

**தொப்பி மாற்றம்**

மற்ற விளையாட்டுக்களைப் போல மாற்று வீர் முறையைக் கொண்டுவரலாம் என யோசனை தெரிவிக்கப்பட்டது. தற்போதைய கிரிக்கெட் விதிகளின்படி களத்தடுப்பில் மட்டுமே மாற்று - வீர்கள் வரலாம். ஆனால், புதிய விதியின்படி இனி மாற்று வீரரும் துடுப்பெடுத்தாடலாம்.

ஆட்டத்தின் எந்தக் கட்டத்திலும் இவ்வாறு வீரரை மாற்றலாம் மாறுபடும் இருவரும் தங்களது தொப்பியை மாற்றிக்கொள்ள வேண்டும். ஒருமுறை வெளியேறிய வீர் மீண்டும் களமிறங்க முடியாது. சூழ்நிலைக்கு ஏற்ப வீரர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உதாரணமாக, அடித்து ஆட வேண்டிய நேரத்தில் ஒருவர் நிதானமாக விளையாடிக்கொண்டிருந்தால் அவருக்குப் பதிலாக அதிரடித் துடுப்பாட்ட வீரர் களமிறங்கலாம்.

இப்புதிய விதிமுறைகள் குறித்து கவாஸ்கர் கூறுகையில்:-

ஆஸ்திரேலியாவில் நடக்க உள்ள 'சூப்பர் சீரிஸ்' ஒரு நாள் தொடரில் புதிய மாற்றங்கள் அமுலுக்கு வரலாம். முதல் 15 ஓவர்கள் விதிமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் போட்டியின் விறு விறுப்பை அதிகரிக்கும் - என்றார்.(க-3)

# முல்லை. வலய தடகளப் போட்டி: புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதலிடம் பெற்று சம்பியனானது

முல்லைத்தீவு,மே21

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 250 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தத் தடகளப் போட்டிகள் கடந்த 16ஆம், 17ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் முல்லைத்தீவு வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். மைக்கல் திலகராசாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றன.

இதில் 250 புள்ளிகளைப் பெற்று, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதலாம் இடத்தையும் 151 புள்ளிகளைப் பெற்று கொக்கிளாய் அ.த.க.பாடசாலை இரண்டாமிடத்தையும் 94 புள்ளிகளைப் பெற்று கலைமகள் வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் 84 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிகளின் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதன்மை வீர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர் பெயர் விவரங்கள் வருமாறு:-

**11 வயதுப் பிரிவு**

**ஆண்** - வை.கயிபன் (இரணைப்பாலை றோ.க.வித்தி.)

**பெண்** - பி.திரெளபத (குமுழமுனை மகா வித்தி.).

**13 வயதுப் பிரிவு**

**ஆண்** - தி.திவிசன் (விக்னேஸ்வரா வித்தி.).

**பெண்** - கே.உ சாந்தினி (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.)

**15 வயதுப் பிரிவு**

**ஆண்** - இ.வசந்தன் (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை).

**பெண்** - இருவர் பி.நித்தியா, ஜெ.சபிதா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**17 வயதுப் பிரிவு**

**ஆண்** - இருவர் ரி.ராகவன், வி.கதீஸ்வரன் (கலைமகள் வித்தியாலயம்).

**பெண்** - எஸ்.சுகிர்தா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.)

**19 வயதுப் பிரிவு**

**ஆண்** - இருவர்: எ.எம்.எவ்.றோசா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கே.தேவதாஸன் (வித்தியானந்தாக் கல்லூரி).

**பெண்** - மூவர்: ஈ.சர்மிளா (செம்மலை மகா வித்தி.), எம்.ராதிகா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கே.மதுமிதா (வற்றாப்பளை மகா வித்தியாலயம்). (3-410-353)

# மாகாண மட்ட மரதன் ஓட்டப் போட்டி: யாழ்.வீரர் முதலாம், 3ஆம் இடங்களில்

வலி.வடக்கு, மே19

வடக்கு - கிழக்கு மாகாணத் திணைக்களத்தினால் மாகாணமட்டத்தில் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் முறையே முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளார்கள்.

திருகோணமலையில் இடம்பெற்ற இந்த மரதன் ஓட்டப்போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த எ.ஜெயரூபன் முதலாம் இடத்தையும் - சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த எஸ்.காந்தரூபன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.(3-86)

## விளையாட்டு

## சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம்,மே21

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் யாழ். இந்துக் கல்லூரியில் நடந்த சதுரங்கப் போட்டிகளின் முடிவுகள வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

வேம்படி மகளிர் உயர்தரப் பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி. (3-86)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம்,மே21

மட்டுவில் தெற்கு தேனொளி முன்பள்ளியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் தெற்கு கதிரொளி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா கலந்துகொள்வார். (3-202)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மே.21

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட வீரர்களுக்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு மன்ற முன்றிலில் ஆரம்பமாகவிருக்கின்றது.(3-202)

# ஆசிய – ஆபிரிக்க கண்டங்களிடையே வருடந்தோறும் கிரிக்கெட் நடத்த முடிவு

ஆசிய, ஆபிரிக்க கண்டங்களில் கிரிக்கெட்டை ஊக்குவிக்கும் வகையில், இரு கண்டங்களுக்கும் இடையே ஆண்டுதோறும் கிரிக்கெட் போட்டிகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசியக் கிரிக்கெட் சபை (ஏ.சி.சி) மற்றும் ஆபிரிக்க கிரிக்கெட் சங்கத்திற்கிடையே இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானதாக ஏ.சி.சி. தலைமை செயல் அதிகாரி அஷ்ரபுல் ஹக் தெரிவித்தார்.

இதன்படி, ஆண்டுதோறும் இரு கண்டங்களுக்கும் இடையே 3 ஒருநாள் ஆட்டங்கள் நடைபெறும். முதல் தொடர் இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறும்.

ஓர் ஆண்டு ஆபிரிக்காவிலும், அடுத்த ஆண்டு ஆசியாவிலும் என்ற முறையில் போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான போட்டி ஆபிரிக்காவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

வீர்களின் நேரத்தைப் பொறுத்தே போட்டி நடைபெறும் இடம், நாள் என்பன முடிவு செய்யப்படும். இப்போட்டிக்கு அதிகாரபூர்வ அந்தஸ்து அளிக்கக்கோரி சர்வதேச கிரிக்கெட சபையையும் அணுக உள்ளோம்.- என அஷ்ரபுல் ஹக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்:-

ஒப்பந்தத்தின் படி கிடைக்கும் லாபத்தில் 70 சதவீதம் போட்டியை நடத்தும் கண்டத்துக்குச் செல்லும். 20 சதவீதம் மற்றக் கண்டத்துக்குக் கிடைக்கும். 10 சதவீதம் ஒரு குறிப்பிட்ட சேவைக்கு நன்கொடையாக அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

போட்டிக்கான அணியைத் தெரிவுசெய்ய இரு கண்டங்களிலும் தனியான தெரிவுக் குழு அமைக்கப்படும் - எனவும் அவர் கூறினார்.(8)

# ஒலிம்பிக் போட்டியை ரீ.வியில் ஒளிபரப்ப ஒருங்கிணைப்புக் குழு சீனாவால் நியமனம்

பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள 2008 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை இலவசமாக நேரடி ஒளிபரப்புச் செய்ய ஒருங்கிணைப்புக் குழு ஒன்று சீனாவால் அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பெய்ஜிங் ஒலிம்பிக் குழுவின துணைத்தலைவர் ஜியாங் ஜியாபோ கூறியிருப்பதாவது:-

"பெய்ஜிங்கில் 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியை அனைத்து நாட்டுத் தொலைக்காட்சிகளும் இலவசமாக ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகளைக் கவனிக்க ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு பல்வேறு அரச துறைகளுடன் பேச்சை நடத்தி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

"இந்தக் குழுவில் சீன அரசின் வெளியுறவுத் துறை, தகவல் தொடர்புத்துறை அரசின் நிர்வாகம் மற்றும் கலால் வரித்துறை ஆகிய அமைச்சகங்களிலுள்ள உறுப்பினர்கள் செயலாற்றுவர்.

'ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக்ஸ் போட்டிகளை உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 400 கோடி மக்கள் பார்த்து ரசிக்கின்றனர். சர்வதேச தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களுக்கு இந்தக் குழுவே அங்கீகாரம் கொடுக்கும்" - என்றார். (க-3)

## எல்லே போட்டிகள் ஸ்கந்தாவில் நடக்கும்

வடக்கு - கிழக்கு மாகாணத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவு மற்றும் பிரதேச செயலக அணிகளுக்கு இடையேயான போட்டிகளில் ஆண்களுக்கான எல்லே போட்டிகள் இன்றும் நாளையும் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஏற்கனவே இப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தபோதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இப்போட்டிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.(3-86)

# சுகாதாரப் பணிமனையில் பரிசாரகர் பரீட்சை

கரவெட்டி,மே21

சுகாதாரப் பரிசாரகர் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதி சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பதவி உயர்விற்காக நடத்தப்படும் இந்தப் பரீட்சையில் 134 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (எ-70-202)


## கண்ணீர் அஞ்சலி

எமது பங்குத் தந்தையான

திரு.அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின்

அன்புத் தாயார்

மலர்வு 09 - 06 - 1921



உதிர்வு 18 - 05 - 2005

### திருமதி அருளம்மா மத்தாயஸ்

அவர்களின் மரணச் செய்திகேட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரது மறைவால் துயரத்திலாழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கொழும்புத்துறை.
(45671)(26-14-17)

புனித செபமாலை அன்னை ஆலய
இளைஞர் கழகத்தினர்.


# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கு மீட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே21

நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கான மீட்டல் வகுப்புகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றன.

தம்பசிட்டி வட இந்து மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகிய இரு நிலையங்களில் இந்த மீட்டல் வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல இரசாயனவியல், பொருளியல், அளவையியல், சங்கீதம், நடனம், கணிதம், வர்த்தகம், தமிழ், கணக்கியல், இந்துநாகரிகம், பௌதிகவியல் ஆகிய பாடங்களுக்கும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் உயிரியல், கணிதம், கணக்கியல், அளவையியல், பௌதிகவியல், வர்த்தகம், தமிழ், சங்கீதம், நடனம், புவியியல், இரசாயனவியல், பொருளியல், நாடகமும் அரங்கியலும், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்கும் மீட்டல் வகுப்புகள் இடம்பெறும். (எ-202)


## ஆள் தேவை

1) காசாளர்
2) ரீமேக்கர்
3) சப்பிளேயர்

ஆண், பெண் இருபாலாரும்

தொடர்பு: மகாலட்சுமி தேநீரகம்
கொக்குவில் சந்தி.

(45469) T.P. : 6206.


# நவோதயா பாடசாலை தெரிவு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் நவோதயா திட்டத்தின்கீழ் நவோதயா பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. வடமராட்சியின் முதலாம் தர பாடசாலைகளில் ஒன்றான இப்பாடசாலை தற்போது நவோதயா பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு மத்திய கல்வி அமைச்சின் அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு மாணவர் கல்விக்கான உதவிகளும் வழங்கபபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(எ-70-202)


## G.C.E.A/L 2005

2005 A/L பரீட்சைக்குரிய பொது அறிவு, பொது ஆங்கிலம் வெளிவந்துவிட்டது!

வெளியீடு: உயர் கல்விச்சேவை நிலையம்.

(26-14-15) சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (45265)



## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 17 - 09 - 1941



மறைவு 03 - 06 - 2001

அமரர் Dr. தம்பிஐயா அருமைத்துரை (R.M.O.)

அன்புக்கோர் அணிகலனாய் பண்புடன்
பார்போற்ற வாழ்ந்திருந்தீர்
இன்னொரு ஜென்மம் என்றிருந்தால்
உங்கள் அன்புக்காகத் தவமிருப்போம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (45679)(26-14-17)

என்றும் நீங்கா நினைவுடன:
குடும்பத்தினர்.



## சளைக்காத சக்தியும் அசுர பலமும்

BLACK & DECKER

DEWALT
High Performance Industrial Tools

தச்சு வேலைக்கு, இரும்பு வேலை மற்றும் வீடமைப்பு வேலைகளுக்கும்

### பிளெக் அன்ட் டெக்கர் மற்றும் டிவோல்ட்
### மின் சக்திக் கருவிகள் ஏராளம்




சமமான 12 தவணைகளில் செலுத்தக் கூடிய
இலகு தவணை முறையுடன்

இப்பொழுது நாடு முழுவதிலுமுள்ள விற்பனை முகவர்களிடமும்

Delgraphics

பிரதான காட்சியறை: 482/1A, ரி. பி. ஜயா மாவத்தை கொழும்பு 10.

விற்பனையாளர்கள் - யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| நந்தலாலா இரும்பகம், யாழ்ப்பாணம் | - தொலைபேசி: 021 222 6234 | தங்கம் சன்ஸ், நெல்லியடி | - தொலைபேசி: 021 226 3205 |
| குளோபல் காட்வெயார், யாழ்ப்பாணம் | - தொலைபேசி: 021 222 2732 | தேவன்சன், சாவகச்சேரி | - தொலைபேசி: 0777 847562 |
| லிங்கம் அன்கோ, யாழ்ப்பாணம் | - தொலைபேசி: 021 222 2133 | தபோதரன், சுண்ணாகம் | - தொலைபேசி: 0777 161738 |
| சுந்தர்சன்ஸ், மானிப்பாய் | - தொலைபேசி: 021 222 2751 | சுதா ரேடர்ஸ், நல்லூர் | - தொலைபேசி: 07773 107690 |

நிகரற்ற பலம் - நேர்த்திமிகு வேலை (சி-42957)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 09 ◆ 01 ◆ 1928

இறப்பு 23 ◆ 04 ◆ 2005

### அமரர் பரமு கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி முன்னாள் தலைவர், புலோலி ப.நோ.கூ.சங்கம்)

அன்போடும், பாசத்தோடும் எம்மோடிணைந்து
பண்போடு வாழ்ந்த உத்தமரே! நீங்கள் மறைந்து
போனாலும் உங்கள் நினைவு மாறாது, மறையாது!
உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாளை (22-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கமலாலயம்"
தென்புலோலி, புலோலி. (சி-42956) (39-14-17-26)

அன்புடன் நினைந்து வாழும்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சின்னராசா



7ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னராசா அவர்கள் 17-05-2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பார்வதி தம்பதிகளின் அருமை மருமகனும் தர்மபூபதியின் அன்புக் கணவரும் கமலதர்சினி (பிரான்ஸ்), விஜயதர்சினி, ஜர்மிளா, தவேந்திரகுமார் ஜனகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அரியபுத்திரன் (தச்சடம்பன்), சுந்தரலிங்கம் (நியு, சரஸ்வதி விலாஸ், பரமேஸ்வராச் சந்தி), பங்கையர்செல்வி, முத்துலிங்கம் (நெடுங்கேணி), சந்திராதேவி, நவரத்தினம், (பிரான்ஸ்), நாகலட்சுமி (ஜேர்மனி), சண்முகலிங்கம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பாலாம்பிகை, தில்லைவனம் (வட்டக்கச்சி), நேசமணி (கொழும்பு), புஷ்பமலர், யோகமங்களநாயகி, காலஞ்சென்ற 'கிருபா நிதி' சாந்தாநிதி (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-05-2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேரதீவு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
7ஆம் வட்டாரம், ஊரதீவு — திருமதி சி.தர்மபூபதி (மனைவி).

# ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சியை வன்னியில் பரவலாக நடத்துவதற்கு ஏற்பாடு

வட்டக்கச்சி,மே21

தமிழக ஓவியக் கலைஞர் புகழேந்தியின் ஓவியக்காட்சியையும் பயிலரங்கையும் வன்னிப் பிரதேசத்தில் பரவலாக பல்வேறு இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் ஆரம்பமான ஓவியக்கண்காட்சி தொடர்ந்து அங்கு நடைபெற்றுவருகின்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை - நாளை மறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சி அழகியல் கலாமன்ற பளைப் பிராந்திய நிலையத்திலும் -

எதிர்வரும் 24ஆம் திகதி பூநகரி மகாவித்தியாலயத்திலும் இந்த ஓவியக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

தினமும் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் - பிற்பகல் 3 மணி தொடக்கம் ஏனையவர்களும் கண்காட்சியைப் பார்வையிடமுடியும் -

தொடர்ந்து 25ஆம் , 26ஆம் திகதிகளில் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் கிளிநொச்சிப் பாடசாலைகளில் சித்திரப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், ஆர்வமுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான ஓவியர் புகழேந்தி நடத்தும் பயிலரங்கு நடைபெறும் .

எதிர்வரும் 27ஆம் திகதி தருமபுரம் மகாவித்தியாலயத்தில் ஓவியக்கண்காட்சி நடைபெறும்.

எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் முல்லைத்தீவு, துணுக்காய், வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் சித்திரப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலரங்கு நடைபெறும்.

தொடர்ந்து 30 ஆம் திகதி மல்லாவி மத்திய கல்லூரியிலும், 31 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், முதலாம் திகதி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் ஓவியக்கண்காட்சி நடைபெறும் என்று கிளிநொச்சி அழகியல் கலாமன்ற அதிபர் தெரிவித்தார்.

(எ-405-203)

# ஆக்கத்திறன் தொழிற்பாட்டு பயிற்சிப்பட்டறை



கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆக்கத்திறன் தொழிற்பாட்டு பயிற்சிப்பட்டறை கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப் பயிற்சிப் பட்டறை தமிழீழ கல்விக் கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக வள அணியினால் நடத்தப்பட்டது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 94 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் பங்குகொண்டனர். இதில் ஈடுபட்ட ஆசிரியர்களால் செய்யப்பட்ட ஆக்கங்கள் இறுதிநாள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

இவற்றை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் உட்பட கல்விக்கழகத்தைச் சேர்ந்தோரும், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, மற்றும் ஏனைய வலயக் கல்விப்பணிப்பாளர்கள், கல்விமேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் உட்பட பலர் பார்வையிட்டனர்.

(படங்கள்: வட்டக்கச்சி செய்தியாளர்)

# மலசலகூட வசதியின்றி புளியங்குளம் மாணவர் அவதி

புளியங்குளம், மே21

வவுனியா வடக்கு புளியங்குளம் பழையவாடி அ.த.க. பாடசாலையில் மலசலகூடம் இல்லாததால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பாடசாலைக்கென சமுதாய மேம்பாட்டு நிறுவனத்தால் ஒரு மலசலகூடம் கட்டிக் கொடுக்கப்பட்டபோதும் அதற்கு இதுவரை கதவு பொருத்தப்படவில்லை. இதனால், மாணவர்கள் அதனைப் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி பாடசாலைக்கு வேலி அமைக்கப்படாமையால் பாடசாலை நேரங்களில் வெளியாள்கள் பாடசாலைக் கிணற்றைப் பயன்படுத்தி வருவதாகவும் பாடசாலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டன.(எ-355-202)

# மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

புதுக்குடியிருப்பு,மே21

உலக தரிசன நிறுவனம் வேல்ட் விஷன் 93 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களை முல்லைத்தீவு மாவட்டப் பிரதி மாகாண சுகாதாரப் பணிமனைக்கு அன்பளிப்பு செய்துள்ளது.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது.

உலக தரிசன நிறுவனப் பிராந்திய முகாமையாளர் லீ.வி.டி.நைல்ஸ், மாவட்ட முகாமையாளர் அன்ரனி ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த மருத்துவ உபகரணங்களை வைத்திய கலாநிதி ஜெயகுலராசாவிடம் கையளித்தனர்.

(எ-353-202)

# மருத்துவ சிகிச்சை

லண்டனில் இருந்து வருகைதந்துள்ள பொது மருத்துவ நிபுணர் ஜெயராஜ் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் சிகிச்சை வழங்கவுள்ளார்.

இன்று சனிக்கிழமை பொது மருத்துவம் சார்ந்த உயர் குருதி அமுக்கம், சலரோகம், தொய்வு போன்ற நோய்களுக்கு சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

(எ-202)

# சிறப்புற நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி,மே21

கிளிநொச்சி, ஜெயந்தி நகரில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் கணனிப் பயிற்சியை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழனன்று சிறப்புற நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன், சமுதாய முன்னேற்ற நிறுவனம் குறித்த கணனிப் பயிற்சியை வழங்கியிருந்தது.

சமுதாய முன்னேற்ற நிலையத்தின் செயலாளர் எஸ்.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், பொதுச்சுடரினை மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகத்தின் துணைப்பொறுப்பாளர் எஸ்.பரஞ்சோதி ஏற்றிவைத்தார்.

தேசியக்கொடியினை தமிழீழ துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கனும், மங்கள விளக்கினை சமுதாய முன்னேற்ற நிலையப் பொறுப்பாளர் எஸ்.நடராஜா, அன்புச்சோலை மூதாளர் பேணலகப் பொறுப்பாளர் எஸ்.விக்னேஸ்வரன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தலைமையுரை, கருத்துரை, சிறப்புரை என்பன இடம்பெற்றன. (எ)

# ஆழிப்பேரலை பாதித்த ஒருதொகுதி ஆசிரியர்களுக்கு உதவிகள் கிட்டவில்லை

அளம்பில்,மே 21

ஆழிப்பேரலை பாதித்த முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணிபுரிந்து தற்போது ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு இதுவரை உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த மேற்படி ஆசிரியர்களின் அழிவுப் பதிவுகள் கூட இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி ஆசிரியர்களையும் கருத்தில்கொண்டு அவர்களின் அழிவுகள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதோடு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்றும் - பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-416-202)



இதுகாவல் கொட்டிலா? இல்லவே இல்லை. வவுனியா வடக்கு புளியங்குளம் பரசங்குளம் எனுமிடத்தில் மூன்று பிள்ளைகளும் தாய், தந்தையருமாக ஐவர் வசிக்கும் வீடு ஒன்றின் தோற்றமே இது. (படம்: புளியங்குளம் செய்தியாளர்)




# உடையார்கட்டு தனிநிர்வாக அலகாக புலிகளால் பிரகடனம்

முல்லைத்தீவு,மே21

விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை இலகுபடுத்தல் மற்றும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு உடையார்கட்டுப் பகுதி தனியான நிர்வாகப் பிரதேசமாக முல்லை மாவட்ட அரசியல்துறையினரால் வரையறுக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டுப் பிரதேசம் இதுவரை விசுவமடுவுடனும் புதுக்குடியிருப்பு பகுதியுடனும் இணைக்கப்பட்டிருந்தது. இதனால், இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்வதில் பல்வேறு இடர்பாடுகள் எதிர்கொள்ளப்பட்டன.

சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்துவரும் இப்பகுதி, ஏனைய நிர்வாக அலகுகளுடன் இணைத்திருந்ததினால் பொருளாதார முன்னேற்றம் அடையாது காணப்பட்டது என்றும்-

அதனைத் தவிர்க்கும் முகமாகவும் - விடுதலைப் புலிகளின் அரசியல் அபிவிருத்தி பணிகளையும் இலகுபடுத்தும் முகமாகவும்- இப்பிரதேசம் தனிப்பட்ட பிரதேசமாக வரையறுக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் உமைநேசன், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லை மாவட்டப் பொறுப்பாளர் மூர்த்தி மற்றும் இப்பிரதேசத்திற்குட்பட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(எ-410-353)

# ஒட்டுசுட்டானில் திருட்டு அதிகரிப்பு

ஒட்டுசுட்டான்,மே21

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பல்வேறு வீடுகளில் இருந்தும் சூரிய மின்கலம், ஜெனரேற்றர், தொலைக்காட்சி, றெக்கோட் பிளேயர் போன்ற பொருள்கள் கடந்த வாரத்தில் மட்டும் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக புதுக்குடியிருப்புக் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டானில் காவல் பணிமனை இல்லாததாலேயே இப்பகுதியில் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

(எ-341-202)

# செங்குளவி கொட்டி குடும்பஸ்தர் படுகாயம்

புளியங்குளம்,மே21

செங்குளவிகள் கலைத்துக் கொட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சேனைப்புலவு நெடுங்கேணியைச் சேர்ந்த ராசலிங்கம் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தமது காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை கூட்டிலிருந்த செங்குளவிகள் கலைந்து கொட்டியதில் படுகாயமடைந்த இவர், நெடுங்கேணி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-355-202)

# சிறுவர் பாதுகாப்பு விழிப்புக் குழுக்கள் நிறுவ ஏற்பாடு

ஒட்டுசுட்டான்,மே21

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வேண்டுகோளுக்கமைய 30 அங்கத்தவர்களைக் கொண்ட குழுக்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கப்படவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவபாலராசா தெரிவித்தார்.

இந்தக் குழுக்களில் துறைசார்ந்த பலரும் இணைந்து சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைக்கு உதவவேண்டும் என்றும்- அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(எ-341-202)

உ
சிவமயம்

# கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்



"கலாபூஷணம்" விருது பெற்ற திருக்கணித பஞ்சாங்க கணிதர், 'வேதாகம சோதிட பூஷணம்'

**சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்**

அவர்களுக்குத் தென்மராட்சி மக்கள் சார்பில் நடைபெறுகின்ற

**கௌரவிப்பு விழாவும் நூல்வெளியீட்டு விழாவும்**

இடம்: யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி
காலம்: 22.05.2005 ஞாயிறு பி.ப.2 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- விழாக்குழுவினர்.**

(45673)(42-14-18-26)

வாழ்த்துவோர்:
**ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம் சரசாலை.**



## முல்லை. தொழில்நுட்பக் கல்லூரிக்குரிய

## பணிநிலை வெற்றிடங்கள்

**1. அதிபர்**
(SLAS/SLES தரத்தில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**2. நிர்வாக அலுவலர்**
A/L சித்தியடைந்திருக்க வேண்டும்.
நிர்வாக அலுவலராகப் பணியாற்றிய அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**3. களஞ்சியக் காப்பாளர்**
A/L சித்தியடைந்திருக்க வேண்டும்.

**4. கணக்கு எழுதுநர்**
A/L கணக்கியல் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**5. காவலாளி**

**பின்வரும் பயிற்சிகளுக்கான விரிவுரையாளர்கள் தேவை**

1. மேசன் பயிற்சி
2. மரவேலைப் பயிற்சி
3. வெளி இணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி
4. அலுமினியம் பொருத்திநருக்கான பயிற்சி
5. தையல் பயிற்சி
6. வீட்டு மின் இணைப்புப் பயிற்சி
7. கணனி பயிற்றுவிப்பாளர்

விண்ணப்ப முடிவு திகதி: 25.05.2005இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்

அனுப்பவேண்டிய முகவரி:-
**தொழில்நுட்பக் கல்லூரி, முல்லைத்தீவு.**

(சி42964)(33-14-18-26)


# காணி பயன்பாடு திட்டமிடல் உதவியாளர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே 21

காணி பயன்பாடு திட்டமிடல் உதவியாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் செயலகத்துடன் தொடர்புகொண்டு தமது விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

(எ-203)

# நல்லை ஆதீனத்தில் இன்று....

யாழ்ப்பாணம்.மே21

திருஞானசம்பந்த சுவாமிகளின் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடத்தப்படும் திருநெறிய தெய்வீக விழாவின் ஏழாம் நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து ஆதீன மாணவர்களான எஸ்.பிரசாந். கே.யோகேஸ்வரன். கே.அர்ஜீன். ஆர்.பேரானந்தரூபன். எஸ்.விஜயசாந். என்.பிரதாபன், கே.கீர்த்தனன். என்.பிரதீபன். எ.விதுசன். இ.கோகுலன் ஆகியோரின் குழுப்பாடல் இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாகக் குமுதினி உருத்திரகுமாரன் (வயலின்). எ.செல்வரத்தினம் (மிருதங்கம்) ஆகியோர் பங்கேற்பர்.

அடுத்து என்.ஸ்ரீநாகபூஷணியின் பாட்டு இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக ஜெனனி நல்லைநாதன் (வயலின்). கே.நந்தகுமார் (மிருதங்கம்) ஆகியோர் பங்கேற்பர்.

தொடர்ந்து பரமேஸ்வரி கணேசனின் இசைக்கச்சேரி இடம்பெறும். அணி செய்கலைஞர்களாக எஸ்.கோபிதாஸ் (வயலின்)- கே.கண்ணதாசன் (மிருதங்கம்). எஸ்.சிவசிவா (கெஞ்சிரா). என்.சதீஸ்குமார் (முகர்சிங்) ஆகியோர் பங்கேற்பர்.

தொடர்ந்து ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நடுநிலை வகிக்க 'சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் தேவைப்படுவது சட்ட ஒழுக்கமா? சமய ஒழுக்கமா?' என்ற தலைப்பில் பட்டி மன்றமும் இடம்பெறும்.

(எ-203)

# வழிகாட்டல் கருத்தரங்கு

நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலைப்பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று தொடக்கம் தொடர்ந்து 4 தினங்களுக்கு காலை 9 மணிமுதல் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கலை வர்த்தக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நாடகமும் அரங்கியலும், அரசியல், புவியியல், தமிழ், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கான கருத்துரைகள் நடத்தப்படவுள்ளன.

(எ-202)


## அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

1996.05.14 ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் **தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக் கிளை** 2005.05.23 ஆம் நாள் தொடக்கம் **தமிழீழ வைப்பகம் புதுக் குடியிருப்புக் கிளை** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**மேலாண்மைப் பணிப்பாளர், தமிழீழ வைப்பகம்.**

(சி 42963) (39-14-18-26)



## பிள்ளையார் இன் A தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம் காடின் றெஸ்றோறன்ட்

AGRADE HOTEL APPROVED BY THE CEYLON TOURIST BOARD

காடின் றெஸ்றோறன்ட் காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரை திறந்திருக்கும் (RESTAURANT AND BAR) விசேடமாக மாலை 5 மணி முதல் இரவு 12மணிவரை கொக்ரெயில்ஸ் பியர் வகைகள் அன்பான உபசரிப்புடன் சிறந்த அனுபவம் வாய்ந்த வல்லுநர்களால் வழங்கப்படும்.

சாப்பாடு வகைகள் ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலத்துக்கு முன்னராக ஓடர் பண்ணவும் கைதேர்ந்த இந்திய வல்லுநரால் சுவையான சாப்பாடுகள் தயாரித்து வழங்கப்படும்.

16 குளிரூட்டப்பட்ட அறைகளுடன் இணைந்த குளியலறைகளுடன், விருந்து மண்டபம், விசாலமான வாகனத் தரிப்பிடம் இவை யாவற்றுக்கும் நாடவேண்டிய இடம்:

PILLAIYAR INN
31, MANIPAY ROAD,
JAFFNA.

Tel. 021 222 5595
Tel. 021 222 2829
Fax. 021 222 5595

G.2 10 Adderson flats,
Narahenpita,
Colombo-5.

E.Mail Piyarinn @ Sltnet.lk
Website.
www.PILLAIYAR INN.COM.
Tel. 011-4-517814.
Mobile: 0777-758574.

(45687)(42-14-18-26)



Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7000000 முதல் 7012262 வரை
சீட்டிழுப்பு இல. 135 திகதி 19-5-2005

வெற்றி எண்கள் **2 3 7 8 2 9** சுப்பர் எண் **02**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,61,97,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | [illegible] | [illegible] | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| [illegible] | - | 2,61,97,200/- | - |
| [illegible] | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| [illegible] | 10 | 50,000/- | 5,00,000/- |
| [illegible] | 107 | 5,000/- | 5,35,000/- |
| [illegible] | 1,050 | 500/- | 5,25,000/- |
| [illegible] | 10,557 | 50/- | 5,27,850/- |
| [illegible] | 104,572 | 10/- | 10,45,720/- |
| [illegible] | 09 | 5,000/- | 45,000/- |
| [illegible] | 107 | 1,000/- | 1,07,000/- |
| [illegible] | 1,056 | 100/- | 1,05,600/- |
| [illegible] | 10,458 | 20/- | 2,09,160/- |
| மொத்தம் | 1,27,935 | | 52,02,930/- |

[illegible] 52,02,930/-

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,64,90,600/-**

[illegible]

7006470-7-32
7005282-6-41
7009485-7-02
7001867-6-51
7004323-0-41
7011177-9-70
7008396-4-60
7005832-6-82



DELMEGE GENERAL EQUIPMENT

**DELMEGE GENERAL EQUIPMENT (PVT) LTD.**

# காட்சியறை முகாமையாளர்

## - யாழ்ப்பாணம் -

வரையறுக்கப்பட்ட ஜெனரல் இக்விப்மன்ட் தனியார் நிறுவனம் இலங்கையின். பிளக் அன்ட் டெக்கர். டிவொல்ட். நிகாய் மற்றும் முதல்தர சர்வதேச மின் வலுக்கருவிகள் வீட்டுப் பாவனைப் பொருட்கள். மின் உபகரணங்கள் என்பவற்றின் ஏக முகவர்களாக தம்மை நிலைநாட்டியுள்ளது. அத்துடன் இந் நிறுவனம் தனது சொந்த படைப்புகளான நுகர்வோர் மின் உபகரணங்களை டெல்ட்ரோனிக்ஸ் எனும் பெயரின் கீழ் சந்தைப்படுத்தியுள்ளது.

காட்சியறை முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நோக்குகளும் உங்கள் பொறுப்பில் பொதுமுகாமையாளருக்கு அறிவிக்கப்படல்

விண்ணப்பதாரர் தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளில் கடமையாற்றிய முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். காட்சியறை மற்றும் கிளை முகாமைத்துவம் தொடர்பில் சேவைச் சான்றிதழ்கள் வைத்திருத்தல் வேண்டும். குழு விற்பனைகளை மேம்படுத்தல் மற்றும் வெளிவாரி விற்பனை விரிவாக்கல் தொடர்பிலான முன்அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணபப்பதாரருக்கு கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 150,000/-க்கு பிணை வைப்பொன்றை வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பத்தை உறவினரல்லாத மத்தியட்சகர்ளின் தொடர்புகொள்ளும் விபரங்களுடன், கடவுச் சீட்டு அளவிலான வர்ணப் புகைப்படமொன்றினை வலதுபக்க மேல் மூலையில் இணைத்து கீழ்க்காணும் முகவரிக்கு விளம்பரத் தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கலாம்.

குழு முகாமையாளர் - ஆளணி

டெல்மேஜ் போசைத் அன்ட் கம்பனி லிமிட்டட்

101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.

## இளையதம்பி ஞாபகார்த்த
## மாபெரும் மாட்டு வண்டி சவாரி



*காலம்:* நாளை (22.05.2005)
ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணி.
*இடம்:* சோனப்பு மைதானம், கரவெட்டி.
A,B,C. முன்னணி
காளைகள் பங்குபற்றும்.
**இளையதம்பி ஞாபகார்த்தக் குழு.**
(சி-42977)(30-11-45)

## செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் விளையாட்டுக் கழகம்

**Rehabilitation Organization of the Deat Sports Club (R.O.O.D.S.C.)**

**15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும்**

**Annual General Meeting**

காலம் : **நாளை (22.05.2005) ஞாயிறு.**
நேரம் : **காலை 8.30 மணி (பழைய நேரம்)**
இடம் : **யாழ். பல்கலைக்கழக மைதானம், திருநெல்வேலி.**

21.05.2005 காலை 6.30 மணி முதல் பி.ப. 5.30 வரை பல்கலைக்கழக மைதானம்.

01) மரதன் ஓட்டப் போட்டி (10 அல்லது 5 கிலோ மீற்றர்)
02) சைக்கிள் ஓட்டம் (30 கிலோமீற்றர்)
03) துடுப்பாட்டம் 11 பேர் (10 over)
04) உதைபந்தாட்டம் 9 பேர் (30 நிமிடம்)
05) பெண்கள் தட்டெறிதல்
06) ஆண்கள் குண்டு எறிதல் (40 வயதுக்கு மேற்பட்டோர்)
07) ஆண்கள் நீளம் பாய்தல்
08) ஆண்கள் உயரம் பாய்தல்
09) ஆண்கள் 200 மீற்றர் ஓட்டம் (18 - 29 வயது)
10) ஆண்கள் 200 மீற்றர் ஓட்டம் (30 - 40 வயது)

**நிகழ்ச்சி நிரல்:**
☆ மங்கள விளக்கேற்றல் ☆ வரவேற்புரை
☆ காலை வணக்கம் ☆ கொடி ஏற்றல்

**விளையாட்டுப்போட்டி**
(யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கொழும்பு)

| | |
|---|---|
| ஆண்கள் 100 மீற்றர் ஓட்டம் | (18 - 29 - வயது) |
| ஆண்கள் 100 மீற்றர் ஓட்டம் | (30 - 40 - வயது) |
| பெண்கள் 100 மீற்றர் ஓட்டம் | (18 - 25 - வயது) |
| பெண்கள் 200 மீற்றர் ஓட்டம் | (26 - 35 - வயது) |
| பெண்கள் சங்கீதக்கதிரை | 40 வயதுக்கு மேல் |
| பெண்கள் பலூன் உடைத்தல் | 40 வயதுக்கு மேல் |
| ஆண்கள் பலூன் உடைத்தல் | 40 வயதுக்கு மேல் |
| ஆண்கள் பணிஸ் உண்ணுதல் | 40 வயதுக்கு மேல் |
| ஆண்கள் 400 மீற்றர் ஓட்டம் | |
| ஆண்கள் 800 மீற்றர் ஓட்டம் | |
| ஆண்கள் தடி கொடுத்து ஓடுதல் | 2 X 400 மீற்றர் |
| பெண்கள் தடிகொடுத்து ஓடுதல் | 2 X 400 மீற்றர் |
| கயிறு இழுத்தல் (10 பேர்) | |

பொதுக்கூட்டம் ஆரம்பம்
மௌனப்பிரார்த்தனை
வரவேற்புரையும் ஆண்டறிக்கையும்
தலைவர் **கெ.பிரகாஷ்** உரை
விளையாட்டுக்கழகம் சென்ற வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல.
அங்கீகரித்தல்
கணக்கு அறிக்கை 2004ஆம் ஆண்டு மு.பரமராசா (விளையாட்டுக்கழகம்)
அங்கீகரித்தல்
போஷகர் (விளையாட்டுக்கழகம்) உரை
**வே.மகேந்திரசிங்கம்**
**மு.இராசரத்தினம** (முன்னாள் தலைவர் - விளையாட்டுக்கழகம்)
**மாவட்டப் பிரதிநிதிகள் உரை**

**திரு.க.சுரேந்திரநாதன்**
(தலைவர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - யாழ்ப்பாண மாவட்டம்)
**திரு.செ.ஜெயகாந்தன் குருஸ்**
(தலைவர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - மட்டக்களப்பு மாவட்டம்)
**திரு.த.வசந்தராசா**
(தலைவர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - வவுனியா மாவட்டம்)
**திரு.து.அன்ரனலீனகே**
(தலைவர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - திருகோணமலை மாவட்டம்)
**தெ.அனுரா**
(தலைவர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - கொழும்பு மாவட்டம்)

**உறுப்பினர் கலந்துரையாடல்**
விளையாடடுக்கழக முன்னாள் தலைவர்
**திரு.இராசரத்தினத்தை** கௌரவித்தல்.

**பிரதம விருந்தினர்**
**திருமதி பத்மினி சிதம்பரநாதன்**
(பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு யாழ்மாவட்டம்).
**மாதுளன்**
(பொறுப்பாளர், தமிழீழ விளையாட்டுத்துறை, யாழ்ப்பாணம்).
**கௌரவ விருந்தினர்**
**திரு.ஜேசன் யெஜகுலராஜா**
(முகாமையாளர் ஜனசக்தி காப்புறுதி யாழ்ப்பாணம்).

**சிறப்பு விருந்தினர்கள்**
**திருமதி ஜெ.சரவணபவ ஐயர்**
(இணைப்பாளர் உடற்கல்வி அலகு, யாழ். பல்கலைக்கழகம்).
திரு **வை.சிவலிங்கம்** (றூட்போஷகர்)
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்.
**ம.சந்திரன்** (செயலாளர்)
விளையாட்டுக்கழகம்.

பரிசுகள் வழங்குதல், நன்றியுரை, மதியபோசனவிருந்து.
எமது அழைப்பை ஏற்று விழா நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ம.சந்திரன் (செயலாளர்)**

விளம்பர அனுசரணை:
**கங்கா போட்டோ அன் டிஜிற்றல் வீடியோ,**
பலாலி வீதி, கோண்டாவில்.
(45693)(35-30-11-45)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

**By: BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்: 23.05.2005
திங்கள், புதன் 3.30 மணி
இடம்: சாயி இன்ஸ்ரியூட்
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
(சி-42867) நேரம்: புதிய நேரம் 3.30

**லஷ்சுமி சினிமா - இணுவில்**
ஸ்ரீகாந்த், சிநேகா, கலாபவன்மணி
நடித்த
**போஸ்**
தினசரி: 11.00, 3.00, 7.00

**மனோகரா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ்,
பூஜா நடித்த
**ஐத்தன்**
காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m., 6.30 p.m., 9.30 p.m.
(C/42254)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)




**ராஜா யாழ்ப்பாணம்.**
அர்ஜுன் இருவேடம், லைலா,
சாயாசிங், வடிவேல் நடித்த
**ஜெய் சூர்யா**
(ரீகல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30,9.30 (பு.நே.)
(C/41381)(12-17)

**நாதன்ஸ் சினிமா**
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
இன்றுமுதல்
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்**
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

## சூரியமூர்த்தி கொழும்புக்கு

கடந்த புதன் இரவு இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டுப் படுகாய மடைந்த திருகோணமலை முன்னாள் நகரசபைத் தலைவர் பெ.சூரிய மூர்த்தி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். குடும்பத்தவர்களின் வேண்டுகோளுககிணங்கவே இவர் திருகோணமலை பொதுவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டார் என்று தெரிவிக்கபபட்டது. கடற்படையின் உதவியுடன் விசேட ஹெலிகொப்டர் மூலம் நேற்றுமுன்தினம் அவர் கொழும் புக்குக் கொண்டுசெல்லப்பட்டார். மயக்கமுற்று ஆபத்தான நிலையிலேயே அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று திருமலை வைததியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மோட்டார் சைக்கிளில் வந்து இவரைச் சுட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கையடக்கத் தொலை பேசி ஒன்று சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று பொலீஸார் கூறினார். சூரியமூர்த்தியைச் சுட்டவர்கள் தப்பிச்சென்றதைத் தாம் கண்டார் எனவும் அனுமதியில்லாததால் தம்மால் சுடமுடியாமல்போனது எனவும் சம்பவம் இடம்பெற்ற சமயம் விகாரை வீதியில் கடமையிலிருந்த படையினர் தெரிவித்தனர் எனக் கூறப்படுகின்றது. அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டால் வேறு பிரச்சினைகள் எழும் எனத் தாம் அஞ்சினார் என அவர் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பெ.சூரியமூர்த்தியின் திருமலை வீடு விகாரை வீதி கடைசி ஒழுங்கையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## இசைப்பிரியர்களே!

இசைவானில் இளமைத்துடிப்புடன் 15 ஆம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடக் காத்திருக்கும்
**ஸப்தஸ்வரா இசைக்குழுவின்**
**"ராக சங்கமம்"**
அலைகள் ஓய்வதில்லை!
சப்தஸ்வராவின் ராகசங்கமமும் அவ்வண்ணமே!!
*புகழ்பூத்த இசையமைப்பாளர்கள்*
ஸ்ரீகுகன், சிவராம் ஆகியோரின் இனிய இசையமைப்பில் திறமை வாய்ந்த இசை நட்சத்திரங்களுடன் கடல் கடந்து ஈழமண்ணுக்கு புகழ் சேர்த்த பாடகர் S.நிரோஜனுடன், ஈழத்தின் புகழ் பெற்ற பாடகர்களுடன்,
"இந்தமண் எங்கள் சொந்தமண்" புகழ் S.G.சாந்தன்
சிறப்புப் பாடகராக கலந்து கலக்கும்
**ஸப்தஸ்வராவின் இராக சங்கமம்**

தொடர்பு:
ஸ்ரீகுகன் (துளசி நெற்கொம்), கல்வியன்காடு சந்தை பின்புறம், ஆடியபாதம் வீதி. T.P.:0214590746, 0776146345
மணிக்குரல் V.சற்குணன், 52, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். T.P.:021 222 7535.
S.நிறோசன், மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம், T.P.:0777262405.
(45688)(30-11-45)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் இராஜகோபால்
(செம்பியன் செல்வன்)

யாழ் புது வீதி, அத்தியடியை வசிப்பிடமாகக கொண்டவரும் இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளரும் இலக்கிய வித்தகருமான ஆறுமுகம் இராஜகோபால் (செம்பியன் செல்வன்) அவர்கள் நேற்று (20.05.05) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

*புது வீதி,*
*அத்தியடி.* (45705)(35-30-11-45)
தகவல்:
திருமதி இ.புவனேஸ்வரி (மனைவி).

## மரண அறிவித்தல்

### சிவசம்பு இராசலிங்கம்
**(உரிமையாளர் - மணிவண்ணன் ஸ்ரோர், சூராவத்தை சுன்னாகம்)**



சூராவத்தை, சுன்னாகம்.

சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு இராசலிங்கம் அவர்கள் 17.05.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் சந்திரமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பசுபதி - சீதைப்பிள்ளை தம் பதியினரின் அன்பு மருமகனும் மணிவண்ணன் (சுவிஸ்), மைதிலி, நந்தகுமார் (லண்டன்), கவிதா (சுவிஸ்), ராஜஸ்ரீ, பிரபு (யாழ்.தேசியக்கல்வியியற் கல்லூரி), இளவரசி ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜய சூரியன், அருட்செல்வம் (சுவிஸ்), தயாளன், ஜெசிந்தா (சுவிஸ்), சாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாம னும் பவித்திரா, தக்ஷனா, தர்ஷனன், பானுஜன், தர் ஷலா, நந்துஷன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இரத்தினம், இன்பநாயகி மற்றும் நேச மலர், பத்மநாதன், பத்மாவதி, தர்மலிங்கம், விமலநாயகி ஆகியோரின் சகோதரனும், சாம்பசிவம், பாலேஸ்வரி சர் வானந்தன், ஜெகநாதன், குஞ்சிதமணி (தாதிய உத்தி யோகத்தர் ,கோப்பாய்) லோகேஸ்வரி (ஆசிரியை, ஏழாலை, மகாவித்தியாலயம்) குழந்தைவேல் ஆகியோ ரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2005) ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-42974)(35-30-11-45)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணம்

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக மேற்படிவைத்தியசாலைக்கு, அபிவிருத்திச்சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுளது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியை பதவி வழித்தலைவராகக் கொண்டு புதிய நிர்வாக சபை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இதன்படி உபதலைவராக நி.சத்தியதாசன், செயலாளராக வ.அஞ்சலோ, பொருளாளராக கா.நடராசா, நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.கனகரட்ணம், அருட்சகோதரி எலிசபத், வே.கரிதாஸ், பி.இரத்தினசிங்கம், கி.லீனஸ், புயோசப் மு.செல்வராசா, ம.யேசுதாசன், ஸ்ரீசெந்தில்குமார், எஸ்.ஜெகபாலன், கே.சகாதேவன், எஸ்.கார்த்தீபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டத்தின் நிறைவில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகள் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரை சந்தித்து கலந்துரையாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ-16)

# சந்திரிகா சதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையிலேயே நோர்வே சமர்ப்பித்த பொதுக்கட்டமைப்பு மாதிரி வரைபில் பல குறைபாடுகள் இருந்தும் அதைஏற்று நடைமுறைப்படுத்த புலிகள் இயக்கம் உடனடியாகவே சம்மதித்தது. ஆனால் சிங்கள அரசு இன்னமும் இழுத்தடிக்கும் மனோநிலையுடனேயே காணப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கான இந்த உதவி நிதியுதவியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு - இன பேதமின்றி பகிர்ந்தளிக்கும் இலக்குக் கொண்ட பொதுக்கட்டமைப்பு எந்தவித அரசியல் கலப்புமற்ற ஒரு மனிதாபிமானப் பணிக்கான கட்டமைப்பாகும்.

இப்பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டிற்கு சிங்கள அரசு விரைவில் வரவேண்டும் என்று உலகநாடுகள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டும் கூட அது இணங்கிவர மறுக்கின்றது.

புலிகள் இயக்கத்துடன் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு வந்து இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்போவதாகச் சொல்லிக் கொள்ளும் சிங்கள அரசு முற்று முழுவதும் மனிதாபிமான நோக்கம் கொண்ட பொதுக்கட்டமைப்பிற்கே இணங்க மறுத்துவருவது தமிழ் மக்களை முற்று முழுதாக விரக்திக்குள் தள்ளியுள்ளது.

விரைவில் பொதுக்கட்டமைப்பு வந்துவிடும் என்று சந்திரிகா அம்மையார் அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றார். அவரின் அறிவிப்புகள் உண்மைத் தன்மை கொண்டவையல்ல. உதவி பெரும் நிதியை பெற்றுவிடத் துடிக்கும் ஏமாற்று நோக்கம் கொண்டவையாகவே அவற்றைப் புலிகள் இயக்கம் கருதுகின்றது. உதவி சமூகத்தை ஏமாற்ற வாயளவில் பொதுக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டதாகக் கூறிவிட்டு அதை நடைமுறைப்படுத்தாது விடும் வழமையான சதி அரசியலைச் செய்யவே சிங்கள அரசு முனைகின்றது.

ஆழிப்பேரலையால் எமது மக்கள் சந்தித்த அழிவுகள் ஒருபுறம் இருக்க, கடந்த 20 வருடத்திற்கும் மேலான இனப்போரில் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான உதவித் திட்டங்கள் என்ற பெரும்பணியும் புலிகள் இயக்கத்தின் முன்னேயுள்ளது. அவற்றை மேற்கொள்ளும் தொடக்க நிலையைப் போர்நிறுத்த உடன்பாட்டில் காணப்பட்ட இணக்கப்பாட்டையும் நடைமுறைப்படுத்த அரசு பின்னடித்து வருகின்றது. போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்டவையும் சரியாக நடைமுறைக்கு வரவில்லை. இந்தக் காலப்பகுதியில் பேச்சு மேசைகளில் இணக்கம் காணப்பட்டவையும் செயல்வடிவம் பெறவில்லை.

ஒட்டுமொத்தத்தில் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களையும்- வற்புறுத்தல்களையும் சிங்கள அரசு சிறிதும் கவனத்தில் கொள்ளாது தொடர்ந்து தனது இனவாத அரசியலை முன்னெடுத்து வருவது தமிழ் மக்களுக்கு பாரிய விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது. போர் நடைபெறும் போதும் சரி - சமாதான அரசியல் காலத்திலும் சரி, சிங்கள அரசு தனது பேரினவாத நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காமலே ஆட்சி நடத்த முனைகின்றது. சிங்கள அரசு தொடர்பாக புலிகள் இயக்கம் கடந்த 20 வருடகாலமாக ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றது. தமிழருக்கு அது ஒருபோதும் நீதி வழங்கப்போவதில்லை என்பதுதான் அது. தொடர்ந்தும் இதேமாதிரி தமிழர்களின் அபிலாசைகளை கருத்தில் எடுக்காத ஒரு கடும் போக்கு - இனவாத - அரசாகவே சிங்கள அரசு தொழிற்படப்போகின்றது.

சர்வதேச பங்காளிப்புடன் நடைபெற்ற தற்போதைய சமாதான முயற்சிகளில் தமிழர்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்கும் என்று நம்பிய தமிழ்மக்கள் இப்போது ஏமாற்றமடைந்து வருகின்றனர். ஒரு மனிதாபிமானப் பணியைக் கொண்ட பொதுக்கட்டமைப்பிற்கே இந்தக் கதியென்றால் புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு என்ற அரசியல் விடயங்களைத் தமிழ்மக்கள் கற்பனை செய்து பார்க்கத் தேவையில்லை. மொத்தத்தில் ஈழத்தமிழரின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காண்பது என்பது நடைமுறை சாத்தியமற்ற ஒன்றாகவே மாறிவருகின்றது. இத்தகைய தோர் அரசியல் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையும் தமிழர்களிடம் இல்லாது போய்க்கொண்டிருக்கின்றது - என்று உள்ளது. (க)

# சுனாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனங்களான தமிழர் புனர்வாழ்வுக் கழகம். ஊற்று. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களான கெயர். போரூட் ஆகியவற்றின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழு செயற்றிட்டங்களை வகுத்து, அடுத்த மாதம் 13ஆம் திகதி மீண்டும் கூடி இறுதி முடிவுகளை எடுக்கவிருக்கின்றது. (ஓ-3-203-204)

அனைத்து வகையான...
VCD, ACD, MP3 பாடல்களும்
60/=
VCD Film - 120/=
Moorthy Studio & Digitel Colour Lab
62/6, ஸ்ரான்லி வீதி, (பழையதபால் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
T.P.0714 168476 (C-42966)
யாழ். வீதி, மானிப்பாய். 021 222 2884

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
அநேக மாணவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஏமாற்றத்தை தவிர்க்க.
மீண்டும் ஒரு புதிய பிரிவு
O/L DAY CLASS
கணித, விஞ்ஞான வகுப்புகள் வாரந்தம் 10 மணித்தியாலங்கள் நடைபெறும்.
ஆரம்பம்: 22.05.2005 திங்கள் 9.00 a.m.

ROTARACT CLUB
மானிப்பாய் றோட்டறக்ட் கழகம்
CELEBRATE ROTARY
நடத்தும்
க.பொ.த உ/த மாணவர்களுக்கான கருத்தரங்கு-2005
இன்று 21-05-2005 சனிக்கிழமை
இடம்:- இணுவில் மத்திய கல்லூரி
மாலை 3 மணி முதல் அளவையியல் R.S.சந்திரன், S.S.மனோகரன்
நாளை 22-05-2005 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி - 1மணிவரை நாடகமும் அரங்கியலும் திரு.ஸ்ரீ கந்தவேள்
மாலை 3 மணி - 6 மணிவரை இந்துநாகரிகம் திரு.சோதிலிங்கம்.
வட்டு இந்துக் கல்லூரி
23.05.2005 திங்கள் காலை 9மணி -12 மணிவரை இந்து நாகரிகம் திரு.சிறீஸ்
மாலை 3 மணி-6 மணிவரை தமிழ் வேந்தன்
24.05.2005 காலை 9மணி-12மணிவரை அளவையியல் R.S.சந்திரன் S.S.மனோகரன்
மாலை 3 மணி-6மணிவரை நாடகமும் அரங்கியலும் ஸ்ரீ.கந்தவேள்
செயல்திட்ட அனுசரணை: IDM Computer Center
K.K.S Road, Jaffna.

# நேற்று இரு தமிழர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களையும் அழைத்து படை அதிகாரிகள் நேற்று இது விடயமாகப் பேசினர். ஊழியர்களுக்கான சம்பளப் பணத்தினை வழங்குவதற்காக வங்கிகளை நேற்றுமட்டுமாவது திறக்குமாறு வங்கிக் கிளை முகாமையாளர்களிடம் படை அதிகாரிகள் கோரினர். ஆனால், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டும் திருகோணமலையில் நிலவும் பதற்ற நிலைமையைக் கருத்திற் கொண்டும் வங்கிகளைத் திறக்க முடியாது என்று முகாமையாளர்கள்மறுத்துவிட்டனர்.

நேற்றுக்காலை திருகோணமலை சந்தைப் பகுதியில் கிரனேட் வீசப்பட்டது. இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்களக் காடையர்கள் குழு, லீவர் பிரதர்ஸ் வியாபார நிலையத்தினுள் பலத்தில் ஒளிந்திருந்த அதன் காவலாளியைப் பிடித்து அடித்துத் துவைத்து, வாள்களாலும் வெட்டியது. நிறுவனத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களையும் தீக்கிரையாக்கியுள்ளது. அங்கிருந்த பொருள்களையும் அடித்து நொறுக்கியுள்ளது. வைத்திலிங்கம் சத்தியநாதன் (வயது 40) என்ற நபரே இந்தச் சம்பவத்தில் வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டார். இவரது தலையில் ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது என்று திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. ஸ்ரீமாபுரம் பகுதியில் நடந்த மற்றொரு சம்பவத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டார். தனபாலசிங்கம் பிரபாகரன் (வயது 25) என்ற இளைஞரே அங்கு வெட்டுக்காயத்திற்கு இலக்கானவராவார்.

இவரது தலையில் ஒருவெட்டும் கையில் இருவெட்டுக்களும் காணப்படுகின்றன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. உப்பு வெளியில் உள்ள தனது தாயார் வீட்டிற்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பி வரும் வழியில் அவரை இராஜவரோதயம் வீதியில் வழிமறித்த சிங்களக்கும்பல் ஒன்று வாளால் வெட்டியுள்ளது.

இதேவேளை, மத்திய வீதியில் காப்புறுதி நிறுவனத்திற்கு அருகில் வைத்து இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் கிரனேட் வைத்திருந்தார் என்பதற்காகக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர் அவரும் வைத்தியசாலையில் நேற்று சிகிச்சை பெற்றார்.

பொலிஸார் அவரைக் கைதுசெய்த பின்னரே கும்பல் ஒன்று அவர்மீது தாக்குதல் நடத்தியது என்று சம்பவத்தை நேரிற்கண்டவர்கள் தெரிவித்தனர். வீதிகளில் நின்றும் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் ரோந்து சுற்றும் இராணுவத்தினரால் தாக்கி விரட்டப்படுகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்ச்சைக்கு காரணமான புத்தர் சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டு மூன்று நாள்களாகிவிட்டபோதும் சிலை அந்த இடத்திலிருந்து அகற்றப்படவில்லை. தாம் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கச் சென்றால் அங்கு கூடியிருக்கும் சிங்களவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஆனால் பொலிஸார் சிலையை அகற்ற முழு மனதுடன் நடவடிக்கை எடுக்கவில்லை இதனாலேயே பதற்றம் தொடர்கின்றது - என்று தமிழர் தரப்பு குற்றஞ்சாட்டுகின்றது. திருமலையில் நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்து வருகின்றது என்று எமது பிராந்திய செய்தியாளர்கள் அங்கிருந்து அறிவிக்கின்றனர். சிலை அகற்றப்படாமல் அங்கேயே இருக்குமானால் நிலைமை மேலும் மோசமடையக் கூடிய நிலைமையே காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களிலும் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோரின் முழுமையான விவரங்களைப் படையினர் அண்மைக் காலமாகத் திரட்டிவருகின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகும் முன்னர் படையினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஒப்பந்தம் கைச்சாத்தான பின் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது அப்பட்டமான ஒரு யுத்தநிறுத்த மீறல். பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடு. அவர்களைக் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் நடவடிக்கை.

படையினரின் இந்த பலவந்தமான செயற்பாட்டினால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் விசனத்துக்குள்ளாகியிருக்கின்றனர். எனவே, படையினரின் இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். அதற்குக் கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஓ-8-13-7)

# செம்பியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டக் கல்விப் பணிப்பாளராக ஓய்வுபெற்றார். மிக இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் பிரவேசித்த இவர், விவேகி, புவியியல், நுண்ணறிவியல், ஆசிய சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும் அமிர்தநங்கை, கலைஞானம், ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார். வாடைக் காற்று திரைப்படத்திற்கு திரைக்கதை வசனங்களை இவர் எழுதியிருந்தார். (ஓ)

LOGIC
எதிர்பார்க்கை
வினா, புள்ளியிடல் திட்டத்துடன் வெளியாகியுள்ளது.
திங்கள் வரை பெற்றுக் கொள்ளமுடியும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை.

40-ம் பரீட்சை
அதிகூடியபுள்ளி பெற்றோர்.

| பெயர் | பெ.புள்ளி |
|---|---|
| 1. வி. விஜேறா | -180 |
| 2. கி. அனோஜன் | -170 |
| 3. இ. அனோஜா | -169 |
| 4. ம. புவீந்திரன் | -164 |
| 5. வே. சேயான் | -162 |
| 6. ப. நிருபன் | -160 |
| 7. உ. சரணியா | -157 |
| 8. பு. அருணோதயன் | -156 |

BOND யாழ்நகர்

Paper Class
A/L 2006
கணக்கீடு
திரு.பாலவாசன்
Sat, Sun: 12.30-1.30
Start : 22/05 - Sun
விங்ஸ்
கல்வி நிலையம்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குணரத்தினம் பத்மலதா (லதா)



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், மட்டக்குளி, காக்கைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் பத்மலதா அவர்கள் நேற்று (20.05.2005) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் RAMGUNA INTERNATIONAL உரிமையாளர் குணரத்தினம் (குணா) அவர்களின் அன்பு மனைவியும் தம்பிராசா -தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ராமு - தெய்வநாயகி தம்பதிகளின் மருமகளும் தாரகா, காந்திகா, ஹரிகரநந்தன், ஹரிசந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயவதனி (மலேசியா), அம்பிகா (மலேசியா), தனம்ஜெயன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் திருமதி மயில்வாகனம் செல்வராணி (மலேசியா), இராசரத்தினம் (ஜேர்மனி), ஜீவரட்ணம் (கனடா), செல்வம் (மலேசியா), ரமேஷ் (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது காக்கைதீவு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைகாக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

65/30B, 6ஆவது லேன்,
காக்கைதீவு, கொழும்பு-15.
T.P.: 2521552

தகவல்:
R.குணரட்ணம் (கணவர்).
(ரி42978) (30-11-34-45)

## வைத்திலிங்கம் கதிரேசு

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கதிரேசு அவர்கள் நேற்று (20.05.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் தெற்கு,
இருபாலை. (45706) (30-11-34-45)

தகவல்:
வருணநாதன்
(P.H.I. - மகன்).

## முருகேசு பிரபாகரன்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த முருகேசு பிரபாகரன் அவர்கள் நேற்று (20.05.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2005) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பனையடி பிள்ளையார் கோயில் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (ரி42979) (30-11-34-45)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.